April 1912. Registered No. M. 925.

செந்தமிழ்ச்செல்வம்

திரிசிரபுரத்து மாதந்தோறும் வெளிவரும்.

ஒரு தமிழ்ப் பத்திரிகை.

செல்வத்துட் செல்வம் செவிச்செல்வ மச்செல்வம்
செல்வத்து ளெல்லாந் தலை.

தொகுதி 2.] பரிதாபி ௵ சித்திரை-௴ 1-௳ [பகுதி-I

உள்ளுறை. பக்கம்

வாழ்த்துக்கவி	291
செந்தமிழ்ச் செல்வத்தின் இரண்டாவது வயதின்தொடக்கம்	292
திருப்பெருந்துறை விளக்கம்	293
விதவைகளின் விஞ்ஞாபனம்	299
பொன்னும்புளிவிளங்காயாம்	300
சிமேநகிதம்	301
சைவசித்தாந்தசாதனம் செ. ஈ	303
கல்விகரையிலகற்பவர்நாள்சில	306
தூக்கிடும்வழக்கு நெடுநாள் நிலைபெற்ற தென்னோ	290
மானிடப்பிறவிஎடுத்தார்கு மறுபிறப்புண்டா	312
புத்தகவரவு	
பலதேசவர்த்தமானம்	

பத்திராதிபர்:— பண்டிதர், அமிர்தம், சுந்தரநாதபிள்ளை.
திரிசிரபுரம்.

வருஷசந்தா ரூ. 1. } Copy Right { வெளிநாட்டுக்கு ரூ. 2.
தபாற்கூலி அணா. 4. } Registered. { தனி சஞ்சிகை அணா. 2.

செ. சுவாமி விலாஸ் பிரஸ், திருச்சி.

(Supplement to "SEN TAMIL SELVAM.")

சென்னை பிரசிடென்சி காலேஜ் தலைமைத் தமிழ்ப் புலவர்
பிரம்மஸ்ரீ மகா மகோ உபாத்தியாயர்

வே. சாமிநாத ஐயர் அவர்கள்

அபிப்பிராயம்.

சிலமாதங்களாக வெளி வந்து உலாவும் "செந்தமிழ்ச் செல்வம்" என்னும் பத்திரிகையைப் பார்த்து வருகிறேன்.

சிறந்த வித்வான்களது இருப்பிடமாக விளங்கிய திரிசிரபுரத்தில் இருந்த தமிழ் வித்வான் ஸ்ரீ அமிர்தம்பிள்ளை அவர்கள் குமாரரும், எஸ். பி. ஜி. காலேஜ் உதவித் தமிழ்ப பண்டிதருமாகிய மகா-ள-ள-ஸ்ரீ அ. சுந்தரநாத பிள்ளை யவர்கள் இப்பத்திரிகையை நடத்தி வருவதும் தக்கவர்கள் இதற்கு விஷயதானம் செய்வதும் தெரிந்து மிக்க திருப்தியடைகிறேன்.

இத்தகைய பத்திரிகை திரிசிரபுரத்தில் நடைபெற்று வருவது இன்றியமையாததே.

இத்தேசத்துக் கனவான்கள் இதனை ஆதரித்து இதன் பத்திராசிரியருக்கு ஊக்கம் அளிப்பார்களென்று நம்புகிறேன்.

இங்ஙனம்,

வே. சாமிநாதையன்.

திரிசிரபுரம் மகா வித்துவானும் வித்வஜன சேகரருமாகிய ஸ்ரீமத் கோவிந்தக் கவிராயர் குமாரரும், பெங்களூர் சென்றல் காலேஜ் தலைமைத் தமிழ்ப் புலவருமான வித்துவான்

ஸ்ரீமத் தி. கோ. நாராயணசாமி பிள்ளை அவர்கள்

அபிப்பிராயம்.

அகவற்பா.

மணிநெடுங் கடல்சூழ *மானில வரைப்பில்
அணிபெறுந் தமிழகத் தார்குறை தவிர்ப்பாள்
சோறுடைத் தாகிய சோழவள நாட்டாள்
சாறுடைத் தலம்பல் திருவிய பொன்னி
ஆர்சிர புரமதில் அமிர்தம் பயந்த
சீரமர் அமிர்தமாஞ் "செந்தமிழ்ச் செல்வம்"
தந்த வசனத் தனிச்சுவை யுண்ண
அடைமொழி கொண்டே அங்கங்குச் செல்லும்
§§ தாள்பல கொண்டு சார்பவள் அகன்ற
† கூர்மை யிட்டகண் குசாக்கிர மதியள்
அமிர்தி லெடுத்த ‡ஆன நவ நீதம்
மாதம் ஒரு §முறை யாகியே வருபவள்
காதலர் மகிழக் காண்பவள் இவளை
புனருற் பவமாப் பொருந்துறச் செய்தவன்

*மானிலம் + மால் + நிலம். §§ தாள் = ஏடு. † கூர்மையிட்டகண் = மிகுந்த அச்சுமையால் எழுதிய இடம். ‡ ஆன = ஆ + ன = பசுவின். § முன்றி = புத்தகம்.

என்னரு மன்பன் இனியகுணச் செல்வன்
செந்தமிழ்க் கிலக்காய்த் திகழ்ந்தவன் பலநூல்
தந்திர யுக்தி தரச்செய் தாய்ந்தவன்—
செந்தமிழ்த் தூதில் செய்ந்நன்றி மறவா
அன்பரை வைத்துத்தன் அகங்குளிர்ந் தார்ந்தவன்
"அமிர்தம் பிள்ளை" என்னுந் நுவலன்
அருந்தவப் புத்திரன் செந்தமிழ்ப் பாவலன்
செந்நெல் விளைத்த செழுமுளை மீட்டுமச்
செந்நெலே யாவது போலத் திகழ்பவன்
பிறர்க்குப காரம் புரியும் பெற்றியன்
சைவ சமய சமரச மார்க்கன்
இலக்கிய இலக்கண மினிது பல கற்றோன்
தந்தை போலத் தருஞ்சிர புரத்தில்
எஸ். பி. ஜி. காலேஜ் இனியதமிழ்ப் பண்டிதன்
"சுந்தர நாதன்" என்னுந் தூயோன்
அந்தமிழ் வாணர் அறைபுக ழோனே.

வெண்பா.

"செந்தமிழ்ச் செல்வம்" செழித்தோங்க நாளுளும்
வந்தவழி மாறாது வாழ்ந்திடுக—"சுந்தர
நாதன்" கருத்து நனியோங்க நாதனருள்
போதம் விளங்கப் பொருள்.

சித்தாந்த சரபம்—அஷ்டாவதானம்,
ஸ்ரீமத் பூவை—கலியாண சுந்தர முதலியாரவர்கள்
இயற்றியது.

திக்திக்குஞ் சித்தாந்த மணங்கமழுந் தமிழருமை செவ்வே யோங்கப்
புத்தியினில் யாருமுல கானுபவ மாராய்ந்து பொலிவு கொள்ள
உத்தமனல் லமிர்தசுந் தரநாத நாவலனு முயர்விற் பன்னன்
எத்திக்கு முலவச்செய் "செந்தமிழ்ச் செல்வம்" வாழ்க வென்று மாதோ.

சைவ சித்தாந்த மகா வித்துவானும் தருமபுரம் ஆதின வித்துவானும் மதுரைச் சங்கத்துக்கும் சைவ மகா சமாஜத்துக்கும் முக்கிய ஆலோசனைக் கர்த்தருமாகிய திருநெல்வேலி

ஸ்ரீமத் S. பால்வண்ண முதலியாரவர்களின்
அபிப்பிராயம்.

"செந்தமிழ்ச்செல்வம்" என்னும் இப்பத்திரிகை "தமிழ் மொழிக் கடலுட்டங்கிய பல்வளப் பொருள்களையும் யாவரும் ஒருங்கே எளிதிற் பெறுதற்கமைத்த ஓர் பண்டகசாலை போன்றதாம்"; இஃது "அமிர்தம் போன்ற வசனத்தையும் கல்வியழகே தனக்கோரழகெனக் கொண்ட தலைவனையும் பெற்றுள்ளதாதலால் யாவருக்குங் களிபேருவகையளிப்ப தொன்றேயாம்."

TINNEVELLY,
1—3—12.

S. PALVANNA MUDALIAR.

செந்தமிழ்ச்செல்வம்

ஒருமாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

பகுதி-2] பரிதாபி-ஞு சித்திரை-மீ 1-உ [தொகுதி-1

வாழ்த்துக்கவி.

எண்சீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

பூமேவு நான்மறைகள் புவியில் வாழி
பொருந்துகார் இனம்பெய்து புகழின் வாழி
மாமேவு மக்களுடன் மற்றுமுள்ள
மன்னுயிர்க ளனைத்துமிங்கே மகிழ்ந்து வாழி
தூமேவு மாலயங்கள் தோன்ற வாழி
சுந்தரவைந் தாஞ்ஜார்ஜ தோன்றல் வாழி
தேமேவு தமிழ்துளித்துத் திகழு மேன்மைச்
செந்தமிழ்ச்செல் வம்வாழி திருவின் மாதோ.

வேறு.

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

செந்தமிழ்ச் செல்வம் வாழி சிந்தையில் விரும்பிக் கொள்ளும்
அந்தமிழ்ச் செல்வர் வாழி அடைவுட னிதனைப் போற்றுஞ்
சுந்தரச் சுகுணர் வாழி தொகைப்பொரு ளீந்தோர் வாழி
கந்தரங் கடுத்த தேவன் கருணையும் பெருகி வாழி.

வேறு.

வெண்பா.

காதற் றிருப்பொருளைக் காட்டுந் திறமமைந்த
தீதற்ற "செந்தமிழ்ச் செல்வமாம்—"போதமுறை
பன்னாளும்வாழி பனிமதியஞ் சூடுபிரான்
தன்னா ரருள்கொண்டு தான்.

அருளானந்த சுவாமிகள்.

செந்தமிழ்ச் செல்வத்தின், இரண்டாவது வயதின் தொடக்கம்.

ஆண்டிரண்டு நமது செந்தமிழ்ச்செல்விக்கு ஆரம்பிக்கின்றது. ஆர்வத்தோடேற்றுப் போற்றுவது பெரியோரின் கடன.

செந்தமிழ் நாட்டுக் கல்விமான்களும் தனவான்களுமாகிய பரோபகாரரின்பேருதவியைக்கொண்டுசெந்தமிழ்ச் செல்வமென்னுங் குழவி வளர்ந்து ஓராண்டு கடந்து ஈராட்டைப் பிராயத்தை எட்டிப் பார்த்திருக்கிறாள்.

பாஷாபிமானமும் தேசாபிமானமுமுடையராய்க் கல்விப்பொருளையுஞ்செல்வப் பொருளையும் முற்பிறப்பில் செய்த புண்ணியத்தாற் பெற்ற தருமவான்கள் இந்த வருடமும் நம் செந்தமிழ்ச்செல்வத்தை ஏற்று ஆதரித்துப் போற்றுவார்கள் என்னும் முழுநம்பிக்கையுடன்முதல் வருடத்தில்எமக்கு நேர்ந்த நட்டத்தைச் சிறிதும் பொருள் செய்யாது இட்டத்துடன் நடத்தத்துணிகின்றேம்.

சென்றவருடம் நமது செந்தமிழ்ச் செல்வத்திற்கு உதவி செய்ய வருபவர்போல்வந்து நடித்து நமது பத்திரிகையைக் கைநிறைய வாரி வீணிலிறைத்து நம்மையும் தபால்மூலமாக அனுப்பச்செய்து நட்டப்படுத்தினர் சிலர்.

சிலர் சந்தாதாரரைச் சேர்த்துத் தருபவர்போல் தந்து அவர்பால் தாங்கள் பணத்தைப்பெற்று நமக்கனுப்பாது அனுப்புகிறேன் அனுப்புகிறேன் என்று சாக்குப்போக்குச்சொல்லிப்பின் நாம்எழுதும் கடிதங்களுக்கும் பதில் எழுதாதிருந்து படிற்றொழுக்கம் புரிந்தார் சிலர். பலர் பத்திரிகையையனுப்பச்சொல்லி அனுப்பப்பெற்றுக்கொண்டிருந்து வி. பி. தபாலில்அனுப்பிய அதனை திருப்பிவிட்டுப் புண்ணியவான்களாயினர்.

உள்ளோரிற் சிலர் நாளை நாளை என்று நாளைக்கடத்திக் கொண்டு வருபவரும் உளர். எந்த நாளும் சிலர் "நாளையே" என்னப்படித்திருக்கின்றனர்.

இன்னோரன்னோரால் எமக்கு நேர்ந்த நட்டத்தாலேயே சிறிது தளர்ச்சி தோன்றினும் எல்லாம் வல்லஇறைவன் அருளை முன்னிட்டுத் தமிழ்மொழி மாட்டுள்ள பேரபிமானத்தாலும் தேசாபிமானத்தாலும் இவ்வாண்டும் எவ்வாண்டும் நடத்தத் துணிவு கொண்டுள்ளோம்; அன்பர்களும் முன்வந்து தம்மாலான உதவி செய்து எமக்கு ஊக்கந்தர வேண்டுகின்றேம்,

பத்திராதிபர்.

திருப்பெருந்துறை விளக்கம்.

(274-ம் பக்கத்தொடர்ச்சி.)

என்பதே. ஐயோ என்னபாவம்! இச்செய்யுளிலாவது திருப்பெருந்துறையை "நெடும்புவிசார்தருமாழ்கடலின்கரை" யென்று சொல்லியிருப்பதாகக் காணேமே? ஐயரவர்களுடையவும் பிள்ளையவர்களுடையவும் முடிபுக்கு முற்றிலும் விரோதமாக வல்லவோ விச்செய்யுள் சான்றுரைக்கின்றது. எவ்வாறெனில் **ஆத்திமாலையை யணிந்த சோழ இராஜனது பூமியைச் சூழ்ந்த ஆழமுள்ள சமுத்திர தீரத்தில்** ஆரிய நாட்டார் குதிரைகளுடன் வந்திருப்பதைத் தாங்கள் கண்டதாகத் தூதாள் பாண்டியனிட மறிக்கை செய்து கொண்டதாக விச்செய்யுள் கூறுகின்றது. தாதகி, ஆத்தி, ஆரம் சல்லகி யெனும் மொழிகள் ஆத்தியென்ற ஒரு பொருளைக் குறிக்குஞ் சொற்கள். ஆத்திமாலை சோழனுக்குறியது. ஆனதால் தாதகிமார்பனென்னுந் தொடர்பதும் சோழனையேகுறிக்கும். சோழபூபதியைச்சார்ந்த கடல் எத்திசையுளதெனவிசாரிக்கப்புகில் "கடல் கிழக்குத்தெற்குக்கரை புரளும் வெள்ளாறு" என்ற ஆன்றோரியற்றியுள்ள சோழநாட்டெல்லையைக்கூறவந்த வெண்பாவில் சோழநாட்டுக்குக் குணதிசையில் சமுத்திர மெல்லையாயுளதெனப் பிரகாசிக்கின்றது. மற்றமுத்திசையிலும் பிறஅரசர் நாடும்நதியுமென வேறுபடுகின்றது. ஆனதால் சோழநாட்டுக்குக் கிழக்கேயுள்ள சமுத்திரதீரத்தில் குதிரைகளிறங்கி யிருப்பதைத் தூதாள்கண்டு அரசனிடந் தெரிவித்திருக்கிறார்கள். அடுத்த உள-வதுசெய்யுளில் பாண்டியன் வாதவூரரை நோக்கிக் குதிரைகள் வாங்கி வரும்படிக் கட்டளையிட்டதைத்தெரிவிக்கிறது. அநேக திரவியங்களுடனும் வாதவூரர் குதிரைகொள்ளப் பிரயாணமானார். எத்திசை நோக்கிச்சென்றாரென்பதை யாராய்வோம். ௩அ-வது செய்யுளீற்றின் "மதுரைப்பதியை நன்கொடு கடந்தார்," அதாவது மதுராபுரியை நன்னிமித்தத்தோடு விட்டுப்பிரயாணமானார் என வாரம்பித்து

> "நெடுங்குடதிசைக் கடனிறைந்தொலிசிறந்தே
> யுடைந்துதயநற்றிசையி லூற்றுவருமாபோ
> மிடைந்தபதியுங்கடமும் வெற்புமிவையெல்லாங்
> கடந்துவதிசென்று பலகாவதமகன்றார்."

என அடுத்த ௩கூ-வது செய்யுளியற்றப்பட்டிருக்கிறது. இச்செய்யுளின் கருத்து. வாதபுரீஸ்வரர் சைநியங்களுடன் மதுரையை

விட்டுப் பிரயாணஞ்செய்த தெத்தன்மையா யிருந்ததெனில் மேல் சமுத்திரம் உடைபட்டு மிக்க ஆரவாரத்துடன் சூரியனுதிக்குங் கீழ் திக்கை நோக்கிச் செல்வதுபோல மதுரைமாநகர மிருக்கும் மேல் திக்கிலிருந்து கீழ்திக்கை நோக்கிச்சென்று அநேகங்காதவழி தூரங் கலை வாதபுரீஸ்வரர் கடந்தாரென்பதே. இவ்வாறு சமுத்திரதீரத்தை நோக்கிச்சென்ற வாதபுரீஸ்வரர் எங்கு சென்றாரென்பதை யாராய்வோம். "சென்ற வழி மாறி யொரு தெய்வவழி செல்வார்" என சடு-வது செய்யுளில் கூறியிருப்பதால் கீழ்க்கடற்றுறைமுகப்பட்டினம் நோக்கிச்சென்ற வாதபுரீஸ்வரர் வழிதப்பித் தெய்வத்தன்மைபொருந்திய வேறொரு வழியோடு சென்றாரென் றேற்படுகிறது இவ்வாறு வழி தப்பிச்சென்றவ ரெங்குற்றா ரென்றாராயலாம். திருப்பெருந்துறைச் சருக்கம் உரு-வது செய்யுளின் பின்னிரண்டடி வருமாறு.

"வருந்தவுழல்வித்த வினையொத்தருள்வசத்தால்
அருந்தவர்பெருந்துறை மருங்கினிலணைந்தனர்."

என்பதே. இவ்வாறு வழிதப்பி வேற்றுவழியாய்ச் சென்ற வாதவூரர் இருவினை யொப்படைந்து திருவருள் கூடிவைக்கத் திருப்பெருந்துறைப் பக்கமடைந்தாரெனத் தெளிவாய் விளங்குகிறது. இச் சருக்கத்தில் இதற்குமேல் திருப்பெருந்துறை நகரத்தை வாதவூர ரடைந்து குருமூர்த்தி தெரிசனம் பெற்றதையும் அதற்கு மேற்பட்ட சங்கதிகளையும் விவரித்திருக்கிறது. வாதவூரர் புராணத்தில் சரித்திரம் இவ்வாறிருக்க மாணிக்கவாசக சுவாமிகள் மேல் திக்கிலுள்ள பெரிய கடற்றுறைமுகப் பட்டினத்துக்கு (The great western harbour)ச் சென்றதாக வாதவூரர் புராணத்தில் சொல்லியிருப்பது போல், ஐயரவர்கள் பலர் மயங்கக்கூறியது எக்காரணம் பற்றியோ அறிகிலேன். தமிழ்ச்செல்வர்களே! சரித்திர ஆராய்ச்சியர்களே! தயைபுரிந்து விடையளியுங்கள் விடையளியுங்கள். மேலும் மேலெடுத்துக்காட்டிய மந்திரிச்சருக்கம் நகூ-வது செய்யுளில் சோழன் என்று பொருள்படும் "தர்த்கிமார்பன்" என்றபதம் "நெடும்புவி சாழ்தரு மாழ்கடலின்கரை" யென்ற தொடர் பதத்துக்கு முந்தி கவி நாயகர் செய்யுள் கூறியிருப்பதில் "தாதகிமார்பன்" எனுஞ் சிறப்புப்பொருள் பயக்குஞ் சொற்றொடரைவிட்டுக் கடற்கரையெனப் பொதுப்பொருள் பயக்கு "நெடும்புவிசாழ்தரு மாழ்கடலின்கரை" யென்றதைமட்டும் ஐயரவர்களெடுத்தாண்டிருப்பது எதுபற்றியோ ஐயரவர்களெண்ணம் என்னமோ வென்பதை யிவ்வியாசத்தை ஆதியோடந்தமாக வாசிப்

வர்களே தெரிந்துகொள்ளும்படி விட்டுவிட்டு அவ்விஷயத்தில் விரிவா யெழுதாம லிருத்திக்கொண்டனம். இதுகாறும் ஐயாவர்களெடுத்துக்காட்டிய விருவகைத் திருவிளையாடற்புராணம் வாதவூரர்புராணம் இவைகளை ஆராய்ச்சி செய்ததில் வாதபுரீஸ்வரர் கீழ்சமுத்திரக்கரையை நோக்கிக் குணதிக்கையே நாடிச் சென்று திருவருள் வசத்தால் வழிமாறித் திருப்பெருந்துறையை யடைந்ததாக மலையிலக்காக வேற்பட்டது. வாதபுரீஸ்வரர் சரித்திரங் கூறும் தமிழ் நூல்கள் பின்னுஞ் சிலவுள. திருவாவடுதுறை ஆதீனம் அடியார்குழுவினரிலொருவராகிய ஸ்ரீ சுந்தரலிங்க மாமுனிவரால் திருப்பெருந்துறைப் புராணமெனத் தமிழில் ஒருநூல் சுமார் ௱-வருடங்கட்கு முன்னியற்றப்பட்டு இதுகாறும் அச்சுக்கு வராமல் தஞ்சை அரண்மனை சரஸ்வதிமாலில் ஏட்டுப் பிரதியாகவே யிருந்து கொண்டிருக்கிறது. அப்புராணத்தை ஆராய்ந்ததில் திருவவதார சருக்கம் ௧௭-௧௯-௪௮-வது செய்யுட்கள் இவ்விடயத்தை யின்னமுந் தெளிவாய் விளக்குகின்றன. அச்செய்யுட்களாவன,

"வடதிசைத்தேசங்கலிங்கம் வங்கமாரடமீளமாமுன்னும்
இடமிருந்ததேசங்களுள பரிகள்மிகவும்வங்கத்தேற்றியிக்கீழ்க்
கடலருகுகொணர்ந்துவிலைபகர் கின்றாரத்தேசங்களிலுள்ளோர்நற்
றிடமருவும்பரியவைகட்கிரவி பசுமபரியுமிணைசெப்பொணாதே." (௧௭

மனவிருப்பினெடுங் கொலுமண்டபத்தினில் வந்திருந்து திரு
வாதவூரர், தனையழைத்தங் கருகிருத்தி முகமனொடுமினியமொழித்
தழையப்பேசி, யினியதிறற்புரவி விலைக்கெய்திய தென்னூர் குணபாலின்
நாள்நீர்போய்த், தனமிகவுங் கொடுத்துவந்த குதிரையெலாம் வாங்கி
நம்பாற்சாரவேண்டும். (௧௯)

திக்கெலாம் புகழ்மிக்கெழுந்து குணதிக்குநாடிவரும்போது நல்
அக்கமேவு புயவாதவூரரை முன்னுன்ம நாதாருளேக்கெதிர்
இக்கண்வரவெனவொர் காந்தமாமலையிரும்பை யீர்ப்பதெனவீர்த்திட
மிக்கசீர்பெருகுதிருப்பெருந்துறை விளங்குமெல்லைபுண்மேவினர். ()

இச்செய்யுட்கள் வடநாடு ஈழநாடு முதலியவற்றிலிருந்து வியாபாரிகள் கப்பல்களில் குதிரைகள் கொணர்ந்து கீழ் சமுத்திரக் கரைப்பட்டினத்தில் இறங்கியிருப்பதாய்த் தூதர்கள் பாண்டியனிடம் விண்ணப்பம் செய்ய அரசன் மந்திரியாகிய வாதவூரரை யழைத்து அவ்விவரத்தை யறிவித்துக் கீழ்சமுத்திரக் கரைக்குச்சென்று குதிரை

கல்வாங்கிவரும்படி யனுப்ப அவ்வாறு கீழ்சமுத்திரக்கரையை நாடிச் சென்ற வாதபுரீஸ்வரரைக் காந்தமலையானது இரும்பை யிழுப்பது போல் திருப்பெருந்துறை யென்னுந் தலத்தி லெழுந்தருளி யிருக்கும் ஆன்மநாதரெனும் பெயர்பூண்ட சிவபெருமான் இங்கு வாவெனத் திருவருளோக்கத்தா லழைக்க அந்நோக்கத்துக் கெதிர்பட்ட வாதவூரர் திருப்பெருந்துறை யெல்லையை யடைந்தாரெனத் தெரிக்கிறது. இவ்வாறு குதிரைகளினுற்பத்திநாட்டை இப்புதுப்புராணிகர்கூறுவதற்கு வடமொழி யாதாரமுண்டு. அது பின்னர் கூறப்படும். மேலச்சமுத்திரக்கரையின் முன் அரேபியா தேசத்துக் குதிரைகள் வந்திறங்குகிற வழக்கமுண்டெனவும் கீழ்சமுத்திரக்கரையில் குதிரைகள் வந்திறங்குவதில்லை யெனவும் பிள்ளையவர்கள் கருத்துப் போலும் மேலேகாட்டிய ௫௭-வது செய்யுள் அவர்கள் கொண்ட கருத்து சரியான முடிபல்லவென்றுங் காட்டுகிறது. இன்னமும் சுமார் ௲ வருடங்களுக்கு மேற்பட்ட பெரியபுராணத்தில் அதிபத்த நாயனார் புராணம் ௫-வது செய்யுளில் சேக்கிழார் சுவாமிகள் நாகைப்பட்டினத்தை வருணிக்கையில் அந்நகரத்தை யடுத்த கடலானது தன்னிடமுள்ள அலைகளைப்பெருக்கிக் கரையிலொதுக்குவதுபோல் யானை குதிரைமுதலியவைகளைக் கூட்டங்கூட்டமாய்க் கப்பலினின்று சொரிந்துகொண்டிருக்கிற தென்கிற பொருள்பட "திரைபோல் கரிபரித்தொகைமணி துகில் சொரிவதாங்கலத்தால்" எனத்திருவாய் மலர்ந்திருப்பதுவும் கீழ்சமுத்திரத்தின் வழியாகவும் குதிரைகள் வந்திறங்குவது பூர்வந்தொட்டே யுண்டென்பதைக் காட்டுகிறது. இன்னும் பல பிரமாணமுள. விரிவஞ்சிவிடுத்தாம் சுமார் ௫௦-வருடங்களுக்கு முன் திருப்பெருந்துறைப்புராணமென வோர் நூல் திருவாவடுதுறை யாதீனத்து மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம்பிள்ளை யவர்களாலியற்றப்பட்டு அச்சுக்கு வந்திருக்கிறது. இப்புராணம் திருப்பெருந்துறையடைந்த படலம் ௧௧-௧௨-செய்யுட்களினாலும் கிழக்குச் சமுத்திரக் கரையில் குதிரைகளிறக்குமதியா யிருப்பது தெரிந்து கீழ்சமுத்திரத்தை நோக்கியே வாதபுரீஸ்வரர் மதுரையைவிட்டுப் பிரயாணமானதாகத் தெரிந்துகொள்ளலாம். இனி வாதபுரீஸ்வரர் சரித்திரங்கூறவெழுந்த வடமொழி கிரந்தங்களை ஆராய்வோம். இவ்வகைச் சரித்திரங்களைத் தென்மொழியிலிருந்தே வடமொழியில் நூல்யற்றியிருப்பதாக நவீன நாகரீகமடைந்த ஒரு சாரார் கூறுங்கூற்று. இக்கூற்று முற்றுமே பயனடைய . ஏனெனில் ஆரியரிஷிபுங்கவராகிய அகஸ்திய

பகவான் எத்தனையோ ஆயிரவருடங்கட்கு முன்னமேயே நந்தென்னாட்டில் புகுந்திருக்கிறார்கள். ஆனதால் வடமொழியும் பூர்வந்தொட்டே யிந்நாட்டில் மிக்க பிரபலமாயிருந்து மத சம்மந்தமான எவ்வகைச் சரித்திரமும் அப்பாஷையிலேயே ஆதியிலேற்பட்டுப் பிறகு தமிழ்ப்பாஷையில் மொழி பெயர்த்திருப்பதாக நினைக்க அநேக ஆதாரங்களிருக்கின்றன, இதற்குச்சான்று திராவிட கவிவாணர்கள் ஒவ்வொருவரும் வடமொழி கிரந்தத்தினின்று தாங்கள் தமிழில் மொழி பெயர்த்திருப்பதாகவே கூறியுள்ளதே போதுமானது. நமது பரஞ்சோதியாரும் அவ்வாறே கூறியுள்ளார். நம்பியாரியற்றிய திருவிளையாடற் புராணத்துக்கும் வடமொழியில் ஆதாரமாகக்கிரந்த மிருப்பதாக ஸ்ரீபிர்மஸ்ரீ மஹாமஹோபாத்தியாயர் வே. சுவாமிநாதஐயரவர்களெழுதியுள்ளார்கள். இதுகாறுந் தென்பட்டவரையில் ஸ்ரீ வாதபுரீஸ்வரர் சரித்திரங்கூற வெழுந்த வடமொழி நூல்கள் ஸ்ரீ ஹாலாஸ்ய மஹாத்மியம், ஆதிகைலாசமான்மியம், மாணிக்கவாசக புராணம் பிருகத்தீர்த்தஸ்தல மஹாத்மிய மென்பவைகளே. ஹாலாஸ்ய மகாத்மியம்தான் பரஞ்சோதியாரியற்றிய திருவிளையாடற் புராணத்துக்கு முதனூலாயுளதென ஆன்றோர் மொழிகிறார்கள். ஹாலாஸ்ய மகாத்மியம் கூசும் அத்தியாயம் சஉ-வது சுலோகத்தின் பின்பாகம் வருமாறு "[illegible]" 'பிராங்முக:ப்ரயயௌதீமான்பிராக்கு ஸமுத்திரதடம்பிரதி' என்பதே இச்சுலோகம் வாதபுரீஸ்வரர் கிழ்திக்கை நோக்கிக் கீழ்சமுத்திரத்தை நாடிச் சென்றனரென்று மாசற்ற வானத்தில் கண்ணுள்ளானுக்குத் தோன்றும் சூரிய வொளிபோலச் செவ்வனே சந்தேகமற விளக்கி விட்டது. இன்னமுமாராய்வதில் மாணிக்கவாசகபுராணம் 20 அத்தியாயம் 1-வது சுலோகம் வருமாறு [illegible] என்பதே. இதின் கருத்து சதுரங்க சேனைகளுடன் குதிரைகள்வாங்கும்பொருட்டுத் திரவியங்களையெடுப்பித்துக்கொண்டு மதுராபுரியினின்றும் கிழக்குத் திக்கைநோக்கி வாதபுரீஸ்வரர் பிரயாணமானார் என்பதாக விருக்கிறது. இன்னமும் பிருகத்தீர்த்த ஸ்தல மஹாத்மியத்தை ஆராய்வோம், பிருகத்தீர்த்த ஸ்தலம் எனும் வடமொழி தொடர்பதம் திருப்பெருந்துறை யெனும் தமிழில் வழங்கும் பதத்துக்குச் சரியான பொருளைக் கொடுப்பதானதாயிருக்கிறது. அடியில் வருஞ் சுலோகங்கள் இக்கிரந்தத்தில் காணப்படுகின்றன.

[illegible]
[illegible] (௧)
[illegible]
[illegible]
[illegible]
[illegible] (௮)
[illegible]
[illegible] (௧௧)

இவைகளின் கருத்து கீழ்சமுத்திரக்கரையில் துருஷ்கநாடு காம்பொஜிபதேசம் முதலியவற்றிலிருந்து குதிரை வாணியர்கள் குதிரை விற்கக் கொணர்ந்திருப்பதைத் தெரிந்த பாண்டிய அரசனாலனுப்பப்பட்ட வாதபுரீஸ்வரர் குதிரை கொள்ள மதுரையைவிட்டுக் கீழ்திசை நோக்கிக் கீழ் சமுத்திரம் போகவரும வழியில் திருப்பெருந்துறை மஹாத்மியத்தைக் கேட்டு மூன்றுநாளித்தலத்திற் றங்கி அடுத்தநாள் சமுத்திரதீரத்துக்குப் போகலாமெனக் கருத்துக்கொண்டு இத்தலத்துக்குச்சென்றாரென்பதாகவிருக்கிறது. ஐயரவர்கள் கொள்கைக்கு அனுவளவும் ஆதாரமற்றதெனை உறுதியாய்ச்சொல்ல இக்கிரந்தத்தைவிட வேறு என்ன வேண்டியிருக்கிறது. மதுரையைவிட்டுப் பிறப்படுகையில் வாதபுரீஸ்வரருக்குத் திருப்பெருந்துறைக்குச்செல்ல நினைவேயில்லாதிருந்ததென்பதும் இக்கிரந்தத்தினாலும் விளங்குகிறது. மூன்றுநாள் தங்கி நாலாம்நாள் சமுத்திர தீரத்துக்குப் போகலாமென்று வாதபுரீஸ்வரர் கருத்துக்கொண்டு திருப்பெருந்துறைக்குள் பிரவேசித்ததாகச் சொல்லியிருப்பதால் திருப்பெருந்துறையென்ற தலம் வேறு குதிரைகொள்ளச்சென்ற சமுத்திரகரைப் பட்டினம் வேறு என்று திட்டமாயும் இக்கிரந்தம் விளக்கிவிட்டது. இவ்வியாசமெழுதப்பட்டுவரும சஞ்சிகை * 202-ம் பக்கத்தில் குறிப்பிட்ட ௧, ௨, ௩, ௪, சங்கைகளின் விசாரணை இத்தோடு பூர்த்தியாய் முடிந்தது. அடுத்த ரு-வது சங்கையாகிய ஆருடையார் கோயிலானது மூர்த்திகாலத்தும இக்காலத்தும் கடற்றுறைமுகப் பட்டினமாயில்லை யென்பதை விசாரிக்கப்புகுவோம்.

---

* சென்ற மார்கழிமீ" த்திய கூ வது இலக்கமிட்ட தமிழ்ச்செல்வமென்னுஞ் சஞ்சிகை.

(இன்னும்வரும்.)

திரு. சாம்பசிவம் பிள்ளை.
Retired Sub-Magistrate, Trichy.

விதவைகளின்,
விஞ்ஞாபனம்.

புத்தியிலும் வித்தையிலுஞ் சிறந்த ஆரியர்காள்! யாங்கள் முறையிடுவதை அலக்ஷியம் செய்யாது தீர்க்கமாய் யோசித்து விடையளிப்பீர் என நம்புகிறோம்.

நீங்கள் மட்டும். சுயேச்சையாய் ஓர் மனைவி யிறந்த காலத்தில், மற்றொருவளை விவாகஞ் செய்து கொள்வதுதான் அன்றோ? நீங்கள் மங்கையர்களை மயக்கி நுங்கள் மோகவலையிற் சிக்கவைத்துப் பின் உங்களையே தஞ்சமென்று அடையுங்கால் மேல் பார்ப்பதும் ஏமாற்றுவதுந்தான் அன்றோ? உங்களுக்கு சமயம் வாய்த்தால் ஸ்திரிகளை அவர்களது சிறந்த ஆபரணமான கற்பிலிருந்து பிரித்து அவர்களை மானபங்கம்பண்ணிச் சந்தியில்சிரிக்க விடுவதுதான் அன்றோ? இத்தகைய மோசமானபிரியத்தை இப்பொழுதல்லோ கண்டுகொண்டோம் இனியும் முன்னுக்குவர முயற்சிசெய்யா திருப்போமோ?

நீங்கள் பெண்டீரை இழந்த காலத்துப் புனர் விவாகம் செய்து கொள்வது; நாங்களேன் கணவனை இழந்த காலத்து மறு விவாஹம் செய்துகொள்ளலாகாதோ? நாங்கள் பால்யத்திலேயே ஏன் கணவனை யிழந்த காரிகைகளாகிறோம்? உங்களாலேயேதான். நீங்கள் சாகும் வரையில் சுகத்தையடைய எண்ணங்கொண்டு எளியவர்களாகிய எங்களது பெற்றோர்களைப் பணத்தால் மயக்கி ஆடுமாடு சந்தையில் வாங்குவதுபோல் வாங்கிப்போய் சீக்கிரம் தள்ளாத வயதால் திடீரென்று உருண்டுபோய் விடுகிறது. நாங்கள் எங்களது பால்ய வயதிலேயே கணவனை யிழந்தோர்களாகிச் சாகுங்காலமட்டும் தலையைச்சிரைத்துக் கொண்டு வெள்ளை வஸ்திரத்தைத் தலையில் மூடிக்கொண்டு விபூதிருத்திராக்ஷங்களை யணிந்துகொண்டு மூலையிலேயே உட்கார்ந்துகொண்டிருக்கவேண்டுமோ?

நாங்கள் இல்லாது உங்களால் என்ன ஆகும். காரியம் சித்தியாவதுங்களால், அழிவதுங்களால்; நாங்கள் யார் கண்ணிலாவது தென்பட்டால் "முண்டச்சி எதிரேவந்தாள் காரியம் சித்தியாகாது" எனக்கூறுவதேனோ? சாகப்போகிற கிழங்களெல்லாம் சுகத்தை யடையவேண்டும். நாங்கள் துக்கத்தை யடையவேண்டும் எங்களுக்கு சுகமென்பது கிடையாதோ? அந்தோ! இஃதென்ன அநியாயம். தற்கா

லம் இந்தியாவில் முப்பதினாயிரம் பால்ய விதவைகளுக்கு மேலிருக்கி றார்கள். இவர்களது கதியென்னே! இப்பொழுது ஆரியர்கள் இவர்களது நிலைமையைச் சீர்திருத்தப்போகிறார்களோ அப்பொழுதே இந்தியா முன்னுக்கு வருவதில் தடையில்லை. நாங்கள் சொல்வதென்னவென்றால் இதுவரையில் எங்களைத் துன்பத்திற்குள்ளாக்கினீர்கள், பொறுத்தோம். இனிமேலாயினும் உங்களது மக்களை கிழவர்களுக்குக்கொடுக்காமலும், குழந்தைவயதிலேயே விவாகம்செய்யாமலும், நாவிதனிடத்தில் தலை வணங்காமலிருக்கச் செய்வதே! இனி முன்னுக்குவர யத்தனியுங்கள்! உங்களது மக்களின் வாழ்நாளை எத்தாலும் கெடுக்காது அவர்களது சுகவாழ்க்கையையே நலமாக நாடுங்கள்.

உபகாரி.

"பொன்னும் புளிவிளங்காயாம்."

ஒருவன் வாயைக்கட்டி வயிற்றைக்கட்டிச் சிறிது பொருளைத் தேடி, எவருக்குந் தெரியாமல் புறக்கடைத் தோட்டத்திற் புதைத்து வைத்துவிட்டு, அந்தியகாலத்தில் தன் குடும்பத்தாருக்குச் சொல்லலாமென்று நினைத்திருந்தான்.

சில காலத்துக்குப்பின் அவனுக்குச் சுரநோய்கண்டு, நெடுநாள் படுக்கையிலேயே இருந்தான். அப்படியிருந்தும் நோய்தீர்ந்து சுகமடைவேன் என்றே நினைத்திருந்ததனால் புதையலைச் சொல்லாமலேயிருந்தான். நாளுக்கு நாள் உடற் சத்துக்குறைந்து நாவைப்பேச இயலாமல் உள்ளே இழுத்துக்கொண்டு, விக்குளும் கபமும் மேலாடி, மரணத்தருவாய் கிட்டிற்று. அப்போது அவனுக்குப் புதையலைப் பெண்டு பிள்ளைகளுக்குச் சொல்ல நினைவு வந்தது. அதனால் அவன், தன்னைச்சூழ்ந்திருந்த மனைவி மக்கள் முகங்களைக் கண்கள் சுழலச் சுழல விழித்துப்பார்த்துத் தன் கையைத் தோட்டமிருக்கும் புறத்தில் சிறிது நீட்டி காண்டக மூடிபோலக் கையைக்குவித்துக் காட்டினான் அப்போது அவன் செயலையும் முகத்தையும் கவனித்திருந்த மனைவி மக்கள் ஐயர் எதனையோ விரும்பிக் கேட்கிறாரென்று ஊகித்து, மதுளம் பழமா வேண்டும்? என்று கேட்க; அவன் அது அல்ல என்னுங் குறிப்பாகத் தலையை வலப்புற மிடப்புறமாக அசைத்தான். பின்னும் அவர்கள் மாம்பழமா? பலாப்பழமா? என்று கேட்க, அவன்

றுன்போலவே தலையை யசைக்க, அவர்கள் நெடுநாள் காய்ச்சலில் கிடந்தவராதலால், புளிப்புப் பண்டத்திலே பிரியம் இருக்கும் என்று ஊகித்துக் கொளுஞ்சிப்பழமா? எலுமிச்சம்பழமா? என்று கேட்கக் கேட்க வலமிடமாகத் தலையசைத்துக்கொண்டே யிருக்கையில் அவர், புளிவிளங்காயா? என்று கேட்ட சமயத்தில், உள்ளும் வெளியுமாயி ழுத்துக்கொண்டிருந்த சிவக்காற்று தலைமேல் நோக்கி அசையும்படி உடைந்து வெளியே பறந்தது. சூழ்ந்திருந்தோர் ஆம் என்கையில் உயிர்போய் விட்டதாகத் தீர்மானித்து, புளிவிளங்காய் ஆசையோடு இறந்தமையால், அவாது கிரியைகளிலே யாவது புளிவிளங்காயை வைத்துப் படைக்கவேண்டுமென்று முடிவுசெய்துகொண்டு அப்படியே செய்தார்கள்.

இதுபற்றியே சமண முனிவர்களும்,

சிறுகாலே யேதமக்குச் செல்வுழி வல்சி
யிறுகிறுகத் தோட்கோப்புக்கொள்ளார்—ிறுகிறுகிப்
பின்னறிவா மென்றிருக்கும் பேதையார் கைகாட்டும்
பொன்னும் புளிவிளங்கா யாம்.

"திரிசிரபுரத் தமிழ்செல்வம்."

சினேகிதம்.

மானிட ஜன்மமெடுத்த ஒவ்வொருவருக்கும் (பணமிருக்கவேண்டும் இல்லாவிட்டால் பத்துஜனமிருக்கவேண்டும்) என்பது நம் தமிழ் நாட்டுப் பழமொழியாகும், அன்றியும் (பணமில்லாதவன் பிணம், ஜனமில்லாதவன் சவம்) என்றுஞ்சொல்வதுண்டு. இதற்குக்காரணம் (சட்டிபெட்டிமட்டுங்குத்தும், பணம் பதினொருதந்தத்தும்) என்பதுபோல் ஒருவனுக்குப் பணமிருந்தால் எந்தக்காரியத்தையுஞ் சாதித்துக்கொள்ளச் சாதகமாயிருக்கும். அஃதில்லாவிடிற் பத்து ஜனமாவது அவ்சியமிருத்தல்வேண்டும். அங்ஙனமிருந்தாற் சமயத்துக்கேற்ப வுதவி புரிவார்கள். அந்த ஜனங்கள் யாரென்று நினைக்கின்றீர்கள் பந்துக்களாகிய சுற்றத்தார்களென்று நினைக்கின்றீர்களோ அன்று, அன்று, (உடன்பிறந்தார் சுற்றத்தாரென்றிருக்கவேண்டாம், உடன் பிறந்தே கொல்லும்வியாதி) யென்பதுபோலக் கூடப்பிறந்தசகோதரர் முதலிய சுற்றத்தார்களெல்லாஞ் சமயம் நேர்ந்தபோது தலையிற் கல்லிடுஞ் சத்துருக்களாய்த் தோன்றினும் தோன்றுவார்கள், பின் யாரென்றால்

(சிநேகம் படைத்தவன் செல்வம்படைத்தவனாக்கும்) என்பதுபோல், உற்ற சிநேகிதரே யுறவின்முறையாராவர், அவர்களிருந்தாற் றிரவிய மிருந்ததுபோலாகும், ஏனென்றாற் பணமிருந்தால் எவ்விதங் காரிய சித்தி செய்துகொள்ள முடியுமோ அவ்விதமே சிநேகிதர்களைக்கொண்டுங் காரியசித்திசெய்துகொள்ள முடியும், ஆதலின் மனிதர்களுக்குப்பணமில்லாவிடினுஞ் சிநேகிதம் அவசியம் வேண்டியதாகின்றது. ஆனால் ஒருவன் பணஞ் சேகரிப்பதிலுஞ் சிநேகிதஞ் சம்பாதிப்பதிலும்தான் பெரும் பிரயாசையாகும், அதனாலேதான் (ஆளைத்தேடி யாஸ்தியைத்தேடு) என்றபழமொழியும் வழங்கிவருகின்றது. ஏனென்றாற் சிநேகிதமானது இயற்கைச் சிநேகிதமென்றும், செயற்கைச் சிநேகிதமென்றும் இருவகைப்படும், அவற்றில் இயற்கைச் சிநேகிதமானது யாதெனிற் சூரியனைக்கண்ட தாமரையானது காரணமின்றி மலர்வதுபோல வெளியிற் காணப்படுங் காரணமில்லாம லுண்டாகக் கூடியதாம். எப்படியெனில் இயற்கைச் சிநேகிதமானது தன் சிநேகிதனுக்கேற்பட்ட சுக துக்கங்களைத்தானும் உண்மையா யனுபவித்தல், தாக்ஷிண்யம், நேர்மை முதலிய கொண்டிருத்தல், கெட்ட காரியங்களைச் செய்யவொட்டாமற் சிநேகிதனைக் கட்டாயமாய்த் தடுத்தல், மித்திரனுக்காக உயிரைத் தத்தஞ்செய்தல் முதலிய நற்குணங்களுடைத்தானதாம். இவ்வித உத்தம குணங்களுடைய புத்திமான்களைத்தான் இயற்கைச்சிநேகிதர்களென்று சொல்வது. இவர்களைத்தான் ஆப்த சிநேகிதர்களென்று உலகத்தார் கொண்டாடுவது, இந்தச்சிநேகிதந்தான் பூர்வபக்ஷத்துச் சந்திரனைப்போல நாளுக்குநாள் விர்த்தியடைந்து நீடித்து நிலைபெற்றிருக்கக்கூடியது. இந்தச் சிநேகிதந்தான் கிடைப்பது அருமையாகும், இந்தச்சிநேகிதங் கிடைக்கப்பெற்றவன் றான் பாக்கியசாலியும் புண்யசாலியுமாவான், செயற்கைச்சிநேகிதமானது அப்படியன்று, அது ஒரு காரணத்தைப்பற்றி யுண்டாகக்கூடியதாகும். எப்படியெனில் நம்மாலாகவேண்டிய காரியங்களை முன்னிட்டு அனேகர் நம்மிடஞ் சிநேகங்கொண்டாடுவார்கள். அக்காரியங்கள் முடியும்வரை நமது உற்ற துணைவர்கள்போல நடித்து ஏவற்பணிவிடை யெல்லாம் இதமாய்ச் செய்வார்கள், அடிக்கடி நம்மை நேரிற் புகழ்ந்து மெச்சுவார்கள். காரியங்கள் முடிந்துவிட்டபின் அச்சிநேகிதமானது அமரபக்ஷத்துச் சந்திரனைப்போலத் தேய்ந்து மாய்ந்தோடிப்போய்விடும், சில ஆசாமிகள் பணத்தை முன்னிட்டும் நம்மிடஞ் சிநேகங்கொள்வார்கள். நம்மிடம் பணமிருக்கும்வரை நம்

மை விட்டு விலகார்கள். நம்மை யடிக்கடி கௌரவப்படுத்திக்கொண் டேயிருப்பார்கள். உடன்கட்டையேறும் உத்தம சினேகிதரைப்போல நடித்துக்காட்டி நய வஞ்சகத்தால் நமது பொருள்களைப் பல வழிக ளிற் பறித்துண்டு கூடவே திரிந்து குடியைக் கெடுப்பார்கள். கையி லிருந்த பொருளெல்லாங் கரைந்து வெறுங்கையாயிருப்பதைக் கண்ட வுடன் (பொருளது போனபோதே புலையனும் திக்கமாட்டான்) என் பதுபோல, அன்றே நம்மிடத்துற்ற நேசத்தை யொழிக்க மார்க்கந் தேடிப் பகைப்பார்கள் சண்டை தொடுப்பார்கள் ஏசுவார்கள் உதாசி னமாய்ப்பேசுவார்கள் நமக்குப் பலவிதமான துன்பத்தையும் புரிந்து விலகுவார்கள். (அற்றகுளத்தி லறுநீர்ப்பறவைபோல், உற்றுழித் தீர்வா ருறவல்லர்) என்ற நீதிவாக்கியப் பிரகாரம், இவ்வித அற்ப சினேகிதர்களை நாம் எப்பவுங் கைக்கொள்ளலாகாது. அப்பேர்ப் பட்ட துஷ்ட புண்ணியவான்களை நேசிப்பதைப் பார்க்கினும் நாயினி டஞ் சினேகிதம் பண்ணலாம், ஏனென்றால் அது நட்பு மறவாதமிரு கம், நாம் செய்த நன்மைக்குக் கைமாறாக அதுவும் நமக்குப் பிரதியுப காரஞ் செய்யுமென்பதற்கு நாம் அநுபவத்திற்றெரிந்த பல சம்பவங் களே யத்தாக்ஷியாகும். நமக்குச்சினேகிதம் அவசியம் வேண்டியி ருத்தலினால் (அக்குளத்திற்-கொட்டியு மாம்பலு நெய்தலும்போலவே யொட்டியுறுவா ருறவு) என்ற உத்தம வாக்கியப்படிக்கும் (இணக்க மறிந்திணங்கு, சேரிடமறிந்துசேர்) என்ற நீதிப்பிரமாணங்களின்ப டிக்கும் இயற்கைச் சினேகத்துக்குறிய உத்தமகுண புத்திமான்களைத் தேடிக்கண்டுபிடித்தே நேசிக்கவேண்டும். மற்ற தீய சினேகிதத்தைக் கட்டோடொழித்து விடவேண்டும். ஆனால் எல்லாம்வல்ல இறை வன் செயல். சுபம். சுபம். சுபம்.

வே. முத்தனாசாரி,
ஸ்டேஜ்மானேஜர்.
S. S. S. V. கம்பெனி பழனிஸ்தலம்.

சைவசித்தாந்தசாதனம் தெ. க.

சிவநாமங்கள்.

(229-ம் பக்கத் தொடர்ச்சி.)

இதினின்னும் நம்போலியர்கள் விடுவிக்கப் படுவார்களாக. சிவ! சிவ! சிவ!

16. 'ஆரியவேதம்' என்பது ஆரியருடைய வேதமெனப் பொருள்படும். 'ஆரியர்' என்பவர்கள் 'ஆரிய' தேசத்திருந்து சில ஆயிர வருடங்கட்குமுன் இத்தமிழ்நாட்டுக்கு வந்ததாகச்சரித்திரக்காரர்கள் கூறுகின்றார்கள். அப்போது இங்கிருந்த வேதம் 'அனுதிகலை யாகம வேதமே,' அதாவது ''மூவாயிரஞ் 'சுந்தரவாகமச்'சொல்லே.'' இப்போது வழங்கிவரும் இருக்காதி நான்மறையன்று என்பதற்கு மேற்கூறியன முதலிய அனேக நியாயங்கள் சித்தத்திற் சிந்திக்கச் சித்திக்கத் தாமே வெளியாகும். நந்திருமூலநாயனார் 'நான்மறை யோகிகளிலொருவர்' என்று பெரியபுராணஞ் சுட்டிக் கூறுவதால் இந்த 'நான்மறை'தான் அந்நாயனார் வெளியிட்ட 'அனுதிகலையாகமவேதம்' என்னும் 'மறைப்பொருள்,' அதாவது, ஆகமமொட்டிய வேதம். அம்மறைப்பொருளே 'தண்ணில்வார்சடையார் தாம்தந்தஆகமப்பொருள்.' அவ்வாகமப்பொருளே 'தமிழ் மூவாயிரம்', அத்'தமிழ்' 'மூவாயிர'மே 'தன்னைவைத்தான் தமிழ்செய்யுமாறே' யென்ற 'தமிழ்.' ஆகவே இனி 'தமிழ்' என்று கூறுவதெல்லாம் ''அனுதிகலை யாகமவேதம்'' எனவாகும். இருக்காதி நால்வேதம், தற்காலத்தில் வழங்குவன, எப்போது யாரால் இத்தேசத்தி லுண்டாயிற்றென்றால் 'ஆரியர்'படையெடுத்து வந்தகாலத்தில் அவருடன் வந்த புறச்சமய நால்வேதம் என்றும், இவை வடதேசத்து நவீன தேவநாகர வெழுத்தில் வந்த காரணமும் இத்தென் தேசத்திற்காணும் சில ஆகமங்கள் அத்தேவநாகர வாரிய வேதபாஷையில் மயங்கினவர்களால் கிரந்த எழுத்தில் எழுதப்பட்டன வென்னும் நினைக்கக் காரணமும், ''தமிழ்'' மறை, தமிழ்த்திருமுறை, காணுந்தன்மையினால் நன்கு புலப்படுங்கண்டீர். ஸ்ரீபார்வதி கலியாண காலத்தில் இத்தென் தேசத்துக்கு அகத்தியர் வருவதற்கு முன்னிருந்ததாகக் கூறும் 'தமிழ்' இத்தமிழ் மறையே வேறெதுவுமன்று. அப்போது ஆரியரின் வாசனைகூட இங்குற்றில்லை. ஆரியரிருந்திருப்பின் ஆரியபாஷையிருந்திருக்கும். அகத்தியர் தனக்குத், தமிழ் தெரியாதே யென்று கூறித் தென்பொதிக்குப் போகத் தடைமொழி கூறியிருக்கமாட்டார். எம்பிரான் அகத்தியருக்குத் தமிழ் உபதேசித்தனுப்பவும் நியாயமில்லை. இத்தமிழுபதேசத்தால், எம்பிரான் ஸ்ரீபார்வதியைத் திருமணஞ் செய்வதற்குங் கற்பாந்த சிருஷ்டிக்கும் முன்னமே, தமிழ் எம்பிரானால் வெளிப்பட்டதென்றுங் கண்டீர்; முற்கூறியமூவாயிரந் தமிழ் நந்தியருளியது என்றபடியாம். 'மாரியுங்கோடையும்' என்ற திருமந்திரம் முற்கூறியுள்ளதாலு முணர்க,

இப்போது விளங்கும் ஆரியரின் நூதன இருக்காதி வேதம் நான்கிற்கும் "பைந்தமிழ்" மறைக்குஞ் சம்பந்தமேயில்லை. கொரானுக்கும் விவிலியநூலுக்கும் என்ன பொருத்தமோ அதேதான் தற்கால இருக்காதி வேதத்தில் உபநிடதங்களில் ஆகமத்தைப்பற்றிய கூற்றில்லையே! ஆகமத்தில் இவ்விருக்காதிஞல் வேதத்தைப்பற்றிய கூற்றில்லையே! தமிழிற் பிறந்த சீலர்காள். நன்காராய்ந்து, நன்காலோசித்து, நன்கு விவகரித்து, நன்கு நிதானித்துப் பாருங்கள்! பாருங்கள்! நம் 'மூவாயிரந்தமிழ்' அடங்கிய திவ்விய 'திருமந்திரத்'தின் உட்கருத்தை நான் உணர்ந்தபடி யுணர்த்துகிறேனே யன்றி வேறு தற்போதமன்று, தற்கால ஆரியவேத நிந்தையன்று அதுவும் நமக்குச்சோபான முறையே. திருமுறை கூறுவதுமஃதேதான்:—

"விரிவிலா அறிவினர்கள் வேறொரு சமயஞ்செய்து
எரிவினாற் சொன்னாரேனும் எம்பிராற் கேற்றதாகும்"

228—229-ம் பக்கத்துப் பிழைதிருத்தம்.

11-வது பாராவின் இறுதியில்.

(4) மூலாருளான் மூவேழ் முப்பதுவாகும்
மூலாருளான் முனுமவை மூலமே
மூலாருளான் முனுமவை வந்தது
மூலாருளானை முன்வந்து நிற்குமே.

21 + 30 = 51 அட்சரம்.

13-வது பாராவில் 3-வது வரியில்

'உற்ற சிவனரால்' என்பதை 'ஹர சிவனரால்' என்று திருத்துக.
'றஹ ஞணைப்படி' என்பது 'ஹரஞணைப்படி' என்று திருத்துக.

15-வது பாராவில்

'எண்ணிறந்துற்றன' என்பதை 'எண்ணிறந்துள்ளன' என்று திருத்துக.

'சிவயோதக' என்பதை 'சிவபோதக' என்று திருத்துக.

230-வது பக்கத்தில் இருப்பதை யெடுத்து 12-வது பாராவை யொட்டிப்படிக்க.

திருநாவுக்கரசுசுவாமிகளின் 'பெருவேளூர்' பதிகம்.

(இன்னும்வரும்) ஹர. ஷண்முகமுதலியார்.

கல்விகரையில கற்பவர் நாள்சில.

முகவுரை.

வைகையாற்றை எதிர்த்து நாலடிநடந்த சிறப்புடையதும் தெய்வீகமுடையதுமான ஜைநமுனிவர்களாலியற்றப்பட்ட நாலடியாரென்னும் நூல் பதினெண்கீழ் கணக்கில் முதன்மையாகக் கூறப்படுகின்றதென்பது தமிழ்விருத்தியுடையார் யாவரும் அறிந்தவிஷயமே. அந்நூலில் கல்வி என்னும் அதிகாரத்தில் உள்ள வெண்பாக்களில் மேற்காட்டிய "கல்விகரையி லகற்பவர்நாள்சில" என்னும் முதலடியையுடைய வெண்பாவும் ஒன்றே; இம்முதலடியின் பொருள் நுண்மையும் பாட்டின் கருத்து விசேடமும் விரித்தெழுதுவதாயிருந்தால் ஏட்டிற்கடங்கா விதமாக விரிந்துபோவும். ஆயினும் நமக்குக்கிடைத்த காலச்சுருக்கமும் விடையைப் பெருக்கமுங் கருதி எழுத அஞ்சுற்றேனாயினும் ஒருவாறு சுருக்கமாய் எழுதுகின்றேன்.

(கல்வி இன்னதென்பது,)

1. கல்வியாவது மக்களாற் கற்கப்படுவது, பெறுதற்கரிய மக்கட்பிறப்பைப் பெற்றவர்கள் அவசியம் அடையவேண்டியது புருஷார்த்தமங்கள் நான்குமே. *அந்நான்கனுள் இக்கல்வி ஒன்றோவெனின் அன்று. பின் யாதோவெனின் அப்புருஷார்த்தங்கள் நான்கினையும் பெறுதற்கு இன்றியமையாத் துணைக்காரணமாயிருப்பது.

(கல்வி எவ்வாறு புருஷார்களுக்குத் துணைக்காரணமாகுமென்பது)

புருஷார்த்தங்கள் என்பது என்னையோவெனின் அறம், பொருள், இன்பம், வீடு என்பனவே. 1 அறம் (நல்லது இதுவென அறுத்துச்சொல்லப்பட்டது.)

2. பொருள் (உலகவாழ்க்கைக்கு இன்றியமையாச் சாதகமுடையபொருள்கள்.)

3. இன்பம் (பொருள்களை எவ்வெவ்வழியிற் செலவிடவேண்டுமென்பதும் அவ்வவ்வழியிற் செலவிட்டுச் சந்தோஷப்படுவதுமே.)

4. வீடு மோக்ஷம் (விடுபட்ட தன்மை அதாவது வாதனைகளினின்று விடுபட்டதன்மை;) இதனால் ஒருவன் அறவழியில் நிற்கவேண்

---

* கல்வியும் பொருளில் முதற்பொருளாக வழங்குதலு முண்டு. இதுபற்றியே "கல்வியுடைமை, பொருளுடைமை என்றிரண்டு செல்வமும் செல்வமெனப்படும்" என்றார் பெரியாரும்.

டுமென்றும் அவ்வழியாலேயே பொருளை ஈட்டவேண்டுமென்பதும் ஈட்டியபொருளைத் தென்புலத்தார் தெய்வம், விருந்து, ஒக்கல், தான், அரசன் என்னும் அறுவர்க்கும் ஆறு பகுப்பிட்டுத் தரும வழி சிதறுருது செலவிட்டு இன்புற்று வினையினீங்கி வீடுபெற வேண்டுமென்பதே ஆன்றோர் கண்ட நெறி. அறத்தில் நின்று பொருளையீட்டற்கும் இன்பந்துய்த்தற்கும், வீடுபெறுதற்கும், அறிவு மிகமிக இன்றியமையாதது என்பது எவர்க்கும் சொல்லாமலே விளங்கும்.

அறிவு விர்த்தியாவதற்குக் கருவியாகவிருப்பது கல்வியே.

ஆதலின் கல்வியே புருஷார்த்தமத்தைப் பெறுதற்கு ஏற்றவழியாயிருக்கிறது. ஆதலின் கல்வியின்றேல் புருஷார்த்தமம் பெறுதல் முயற்கொம்பாம். (முடியாதென்றபடி.)

கல்விக்காதாரமாகிய நூல்கள் மிக்கதற்குக் காரணம்,

கல்வி என்பது கடவுளாலும் கடவுளினருள்பெற்ற முனிவர்களாலும் ஆன்மாக்களுய்யுமாறு அருளிச் செய்யப்பட்ட வேதாகம, புராண, இதிகாசங்கள் முதலியன. இவற்றையே கால் வேறுபாட்டாலும் அறிவுவேறுபாட்டாலும்தத்தமக்குப் புலப்பட்டவிதமாகப் பின்னோர்விளக்கியும், சுருக்கியும், பலபலநூல்கள் வெளியாக்கி யிருக்கின்றனர். அதனையே ஆதாரமாகக் கொண்டு கற்கவேண்டியவர்களாகிறோம்.

கல்வியின்பிரிவு. கல்வி பலதிறப்படும்.

1. தன்னைப்பற்றி யறியும் கல்வி,
2. உலகத்தைப்பற்றி யறியும் கல்வி,
3. தலைவனையறிந்து அவனையடையும் வழியை அறியும் கல்வி,

என முத்திறப்படும். இதற்குக் கருவி இலக்கணம், இலக்கியம், கணிதம், தருக்கம், வேதாந்த, சித்தாந்த முதலியன.

நூல் மிகுதியைத் தெரியும் வழி.

உலகநூல் அறிவுநூலென்னும் இரண்டையும் உலகத்தார் அறிந்து ஞானமுடையவர்களாய் மோட்சம் பெற்று உய்யவேண்டுமென்று கடவுளும் கடவுளருள்பெற்ற மகான்களுந் தந்தருளியுள்ளார். இவ்வாங்கு தந்தருளப்பெற்றமுதல் நூல்களைவிளக்க வழிநூலும், அதனை விளக்கச் சார்பு நூலுமெனப் பல்லாயிர நூல்கள் கருணையுடைய பெரியோர்களால் வெளிப்படுத்தப்பட்டன. ஒருவன் இந்நூல்களனைத்தையும் படிப்பதெனத் தொடங்கினுற் சிற்றறிவுஞ் சின்னுளும் பல்பிணியு

முள்ளமாந்தர்க்கு ஏலாததாகும். ஆதலினால் அறிவுடையோர்களால் இவற்றுள் தெரிந்துகாட்டப்பட்ட நூல்களை முதலிற்கற்றுப் பின் சாவகாசமிருக்குமேல் மற்றவைகளைக் கற்கத் தொடங்கவேண்டும்.

கற்றற்கு ஏற்றவழி.

கற்பதுந் தானே யுய்த்துணர்ந்து கொள்வோமெனத் தொடங்கின் ஐயந்திரிபு விபரீதமென்பவற்றாற் பெரிதும் இடர்பட்டுப்பயனைப் பெறாது போவதுமன்றித் தன்முயற்சிவீண்முயற்சியும் விபரீதமுயற்சியுமாகுமாதலின் நல்லாசிரியனையடுத்தே அந்நூற்களைக் கற்கவேண்டும்,

கற்பது இதெனத்தெரிந்து கற்றற்கோருதாரணமும் முகவுரையும்.

மேற்காட்டிய வெண்பாவில் நீரைநீக்கிப் பாலுண்ணும் அன்னம் போலத்தெரிந்து நூல்கற்க என்றனர். இதில் அன்னம் நீரையும்பாலையுமுண்ணு மியல்புடையதே; பாலையும் நீரையும் கலந்துழி நீரினும் பால்விசேடமுடைமையும் பயனுண்மையும் சுவையுடைமையுமறிந்து அன்னம் அவற்றில் நீரைப்பிரித்துப் பாலைமாத்திர முண்ணும், அதுபோல ஒருவன் உலகில் நூல்கள் பலவிருப்பினும் சிறப்பு, இனிமை, பயன் முதலியவற்றான் விழுமியதிதெனக் கண்டு அவற்றைக் கற்கவேண்டும். தான் கண்டுகோடற்கு வல்லவனாயின் பெரியோர் கண்டுவைத்த சிறந்த நூற்களை நல்லாசிரியர் வாயிலாய்க் கற்றுணரவேண்டும் என்பதே இதன்தேர்ந்தபொருள்.

"கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக,"

என்ற மாதானுபங்கியாரின் பொய்யா வேதப்பொருள்படி கற்றப்பின் அந்நிலைநிற்றல் அதனினுஞ்சாலச்சிறந்ததாகும். நமரங்காள்! இதுகண்டு காலத்தை அவமாக்காது பயனுள்ளதெனப் பெரியோர் கண்டுவைத்த நூற்களை நல்லாசிரியரிடத் தடைந்து கற்று அந்நூல் காட்டிய வழியில் நின்று பயனைப் பெறுவீர்களாக. இறைவன் அருள் வாழி, உலகு இன்புற்றுவாழி. சுபம்!

J. M. சோமசுந்தரம் பிள்ளை.
திரிசிரபுரம்.

தூக்கிடும் வழக்கு நெடுநாள் நிலைபெற்றதென்னோ?

தூக்கிடுதல் என்பது கொலைசெய்தோரைக் கொல்லுதற்கு ஏற்பட்டுள்ள ஓர் கருவியில் மாட்டித் தொங்கச்செய்து கொல்லல் என்பதுபொருள்.

தூக்கு என்பது தன்னிடத்துத் தொங்க விடுத்தவரை அவர் கழுத்திலிறுக்கிக் கொல்லும் கருவி.

தூக்கிடும்முறை தமிழரசர்கள் காலந்தொட்டு இன்றளவும் நடந்தேறி வருகின்றதொரு தண்டனை முன்றயரம் அரசர்கள் முற்காலத்தில் கொலைசெய்தாரைத் தூக்கிவிட்டும், கழுவிலிட்டும், சுண்ணாம்புக் காளவாயிலிட்டும், நிலவறைக்குளிட்டு மூடிவிட்டும், சுவற்றினிடையில்வைத்துப் புதைத்துப்பூசியும், உயிருடன்வைத்துக் கட்டையிலிட்டுச்சுட்டும், வாள்கொண்டு வெட்டியும், உணவின்றி இருட்டறையில் விட்டுமூடியும், உப்பின்றிப் பலநாள் உணவிட்டுக்கொன்றும், தீவட்டியாற் சுட்டுக்கொன்றும், முள்ளுப்பீப்பாயிலிட்டுஉருட்டிக்கொன்றும் மலையிலிருந்துருட்டியும், காலிற் கல்லோடு இணைத்துக்கட்டி வீழ்த்தியும், யானையின் காலிலிட்டு இடறச்செய்தும்; கல்லெறிந்துகொன்றும் சதைசதையாகக் கிழித்துக் கொன்றும் இன்னோரன்ன சித்திரவதைகள்செய்தும் கொன்றுவந்தனரெனத் தெரிகின்றது.

இன்னும் மேலைநாட்டில் மேற்சொல்லியவற்றிற் சிலகொண்டும் மின்சாரம்பாய்ச்சியும் கொலைசெய்தாரைக் கொலைசெய்து வந்ததாகச் சரித்திரமூலமாகத் தெரிந்துவருகின்றோம். கொலைசெய்தாரைக் கொலைசெய்யவேண்டுவது அரசநீதியென்று மனுநீதியினால்தெரிகின்றோம். கொலைசெய்தவனை அரசன் தண்டிப்பதினால் கொலை செய்தோனுக்கு நரகவாதனை நீங்குகின்றது. அரசனுக்கு நீதி சரியாக நடத்தியதாற் புண்ணியமும்புகழும்உண்டாகின்றது. தெய்வவருள்பெருகுகின்றது. இன்னும் உலகிற்கு நன்மை எய்துகின்றது. உலகிலுள்ளோர் அரசன் தண்டனைக்கு அஞ்சி இத்தகைய கொலை செய்தலினின்றும் நீங்குவர். உலகில் கொலைபாதக முதலியனவின்றி உலகம் இன்புற்றுவாழும்என்னும் இவைகள் நம்மனோர் நன்குணர்ந்த விஷயமே.

இது நிற்க, இத்தகைய வழக்கம் பண்டைக் காலத்ததே, இந்த வழக்கம் இன்னும் நீடித்து வருவதே வியப்பு. ஏனெனில் காலத்துக்குத்தக்கபடி நீதி முதலியனவும் மாறுபாடடைய வேண்டுமென்பது எல்லாரும் விரும்பக்கூடியதோர் விஷயமேயாகும்.

இதுபற்றியன்றோ பெரியோரும்

> "பழையன கழிதலும் புதியன புகுதலும்
> வழுவல கால வகையி னானே"

என்று திருவாய் மலர்ந்தருளினர். வழக்கங்களும், பழக்கங்களும், நீதிகளும், முறைகளும், ஆசாரங்களும், கோட்பாடுகளும்மாறு படுகின்ற இக்காலத்தில் இதுவும் மாறுபாடுற வேண்டுமென்பது மிக முக்கியமானதன்றோ?

கொலைபாதகர்களைத் தண்டிக்கும் வழக்கங்கள் முற்காலத்துப் பலவிருந்தனவென முன்னரே கூறினோம். அவைகளிற் சற்றேறக்குறைய எல்லாம்போகத் தூக்கிடுதல் ஒன்றே இந்தக்காலத்தும் வழங்கி வருதலைக் காண்கிறோம். மற்றைய வழக்கங்களெல்லாம் மிகக்குரூரமானது எனக் கொண்டே அவைகளை நீக்கி யிருக்கின்றனர். நமது கருணைமிக்க ஆங்கில அரசாங்கத்தார்; இவர்களின் தண்ணருளின் மேன்மை நம்மவர் மிகவும் புகழ்ந்து கொண்டாடத் தக்கதே.

தூக்கிடும்போழ்தும் கொலைசெய்தவன் கொலைசெய்யப் படவேண்டும் என்னும் நமது நாட்டுத் தொன்றுதொட்டு வழங்கிவரும் மனுநீதிப்படிநடந்துவந்தாலும் தூக்கிடப்படுபவனைகண்டவர் குரூரவதை என்றுகண்டு நடுங்காவண்ணம் முகம் முழுதும் மறைக்கும் குல்லாவால் மறைக்கின்றனர் தூக்கில் நெடுநேரம் தொங்கித் துடிக்கா வண்ணம் இரண்டொரு கணத்திலேயே உயிர்போம்படியாக ஏற்பாடுசெய்திருக்கின்றனர். இன்னும் தூக்கிடுதற்குமுன் அவன்விருப்பம்தெரிந்து அவன் விருப்பத்தைப் பூர்த்திசெய்தும் வருகின்றனர்.

இவைகள் யாவும் நமது மேன்மை மிக்க அரசாங்கத்தின் கருணையை நன்றாய்க் காட்டுகின்றது.

நிற்க, சில இடங்களில் கலகம் உண்டாகி பகை மிக்கெழுகின்ற போது ஒருவனை ஒருவன் கொல்வேனெனப் பேசும்பொழுது 'அடே! பயலே! உன்னை நான் கொன்று விட்டுத் தூக்கு மரத்திற்குப் போகிறேன்' என்கின்றான். இவ்வாறு பலஇடங்களிலும் பேச எல்லோரும் கேட்டிருக்கலாம்; இதனால் தூக்குக்குப்போவது அவர்களுக்குப் பெரியகாரியமாகத் தோன்றவில்லை என்று தெரிகிறது. இது என்ன ஒன்றிரண்டு கணத்திற் படுமகஷ்டந்தானே என்றைக்கிருந்தாலும் இறக்க வேண்டியதுதானே என்று அவர்களுக்கு எண்ணம் உண்டாகிக்கூறுகிறார்கள் போலும்.

பலபெண்கள் தாங்களே தூக்கிட்டுங் குளத்திலிழுந்தும் சாகத் துணிகின்றபொழுது ஆண்பிள்ளைகளுக்கு இத்துணிவு உண்டாவது ஒருபெருத்த அதிசயிக்கத் தக்கதன்று.

தூக்குமரத்திற்றொங்கி உயிர் விடுதலை ஒரு விளையாட்டாகவும் நினைப்பவருஞ் சிலருண்டெனக் கேள்விப்படுகின்றோம்.

தூக்கிட்டு ஒரு கொலை பாதகனைக் கொன்றால் கொல்லப்பட்டவனுக்காகிலும் அல்லது அவன் குடும்பத்திற்காகிலும் ஏதேனும் பயன் உண்டா? எந்தவிதமான பயனும் இல்லையென்றே நினைக்கின்றேம்.

ஆகையால் கொலை செய்தவர்களைக் கொல்லுதலைக் காட்டிலும் அவர்கள் தாம்செய்த பாதகத்தை நினைத்துநினைத்து உருகிமனம்புண்ணாகவும் கண்டோர் கொலைபாதகன் படும்பாட்டைக் கண்டு நாம் கொலைபாதகம் செய்தால் இவர்களைப்போல் சாகும்வரையுஞ் சஞ்சலப்பட வேண்டிவரும் என்றுகண்டு அஞ்சி நடுங்கிக் கொலைபாதகஞ் செய்வதனின்றும் நீங்கிநிற்குமாறுங் கொலை செய்யப்பட்டவன் குலத்தினிற்கு ஒருசிறு உதவியாக இருக்குப்படிக்கும், நாட்டிற்கு க்ஷேமம் உண்டாகும்படிக்கும், கொலைபாதகர்களைத் தப்பி ஓடிவிடாதபடி விலங்குகளாற்பிணித்து மலவண்டியிழுத்தல், குப்பைவண்டியிழுத்தல் போன்ற வேலைகளை வாங்கிக்கொண்டு வருத்தியும் காடுகளில் மரங்கள் கட்டைகள் பிளந்து சுமந்து கொண்டு வந்து போடவும் செய்துவந்தால் நாட்டிற்கும் நன்மைநேரும். இதுவும் கொலை செய்தவனுக் குணர்ச்சி வருதற்காதாரமாகும். கண்டோரும் அஞ்சிநடுங்கிக் கொலைசெய்தலைக் கனவிலும் நினையார். இவர்கள் செய்யும் தொழிலால் வரும் லாபத்தைக்கொண்டு இக்கொலை பாதகர்களுக்காகச் செய்யுஞ் செலவுக்கும் கொலையுண்டோரின் குலத்துக்கு மாதா மாதம் ஒரு சிறு தொகை கொடுத்துதவுதற்குந் தக்கதாகும்.

சிலகுடிகளில் முக்கியமான மனிதன் கொலை யுண்ணப் பட்டால் அக்குடும்பம் சோற்றுக்குத் திண்டாடும் நிலையில் வந்து விடுகின்றது இதனால் சிறிது தொகை கொலையுண்ட குடும்பத்திற்குக் கொடுத்துவரின் பேருதவியாகவே யிருக்கும், இது நமது மனுமுறை எழுதிய காலத்திலே ஏற்பட்டிருக்குமானால் மிக நன்றாயிருந்திருக்கும். இக்காலங்களிலாகிலும் ஏற்பட்டுவிட்டால் உலகிற்குப் பெருபகாரமேயாம்.

நரபலி யிடுதல், சிசுவதை செய்தல், உடன்கட்டை யேறல், அடிமைகளைவிற்றல் முதலிய கொடிய வழக்கங்களை எல்லாம் கட்டோடே

நீக்கியருளுஞ் சமாதானமும் சந்தோஷமும் பெருகும் இக்காலத்தில் சிற்சில இடங்களில் இவ்வழக்கத்தையும் அநுட்டிக்கிறதாகக் கேழ்விப்பட்டு மிகவானந்திக்கின்றோம்.

K. RAMASWAMY AIYER,
Sanskrit Pandit,
S. P. G. High School, Trichy.

மானிடப்பிறவி யெடுத்தோர்க்கு மறுபிறப்புண்டா.

உலகத்திலுள்ள சில மதஸ்தர்கள் பலவித சரீரங்களைக் கூடியிருக்கும் ஜீவாத்துமாவுக்குக் கருமபந்தத்தினால் பல ஜனனமரணம் உண்டென்பார்கள் சிலர் வேறு பிறப்பு இல்லை யென்றும் இப்பிறப்பில் புண்ணியம் புரிந்தோர் மோக்ஷலோகத்தை அடைவர்களென்றும் பாவஞ்செய்தவர்கள் நரகத்தில் ஆழ்த்தப்படுவார்களென்றும் மற்றுஞ் சிலர் வேறு மானிடஜனன மில்லையாயினும் இவ்வுலகத்தில் பாவஞ் செய்பவர்கள் ஒருவித நரகலோகத்தில் பிறந்து பரிசுத்தமடைந்து பின்பு மோக்ஷத்தை அடைவார்களென்றும் சொல்லுவார்கள் வேறு சிலர் புநர்ஜனனமில்லையென்றும் வித்தானது மரமாகிப்பூத்துக்காய்த்து வித்தையளித்துப் பட்டுப் போவதுபோல் உயிர்கள் ஸ்வபாவமாயுண்டாகி காலத்தில் அழிந்து ஒழிந்துபோமென்றும் வாதிப்பார்கள். ஆயினும் இவ்வுலகத்தில் நாம் ஒரு பொருளாயிருக்கின்றோம். ஆத்மஞானமுள்ள மனிதராகிய நமக்கு இப்பிறப்புக்குமுன் இருந்ததுண்டா உண்டானால் என்ன ஸ்திதியிலிருந்தோம் இனி இந்த ஜன்மத்தின் பிறகு இருப்பதுண்டோ உண்டானால் என்ன ஸ்திதியிலிருப்போம் என்னும் கேள்வியைவிட இனிய விசாரம் வேறில்லை ஆதலால் இவ்விஷயத்தைப் பற்றி அடியில் எழுதுவதை நமது சிநேகிதர் அதிக விருப்புடன் வாசிக்காவிடினும் வெறுப்பின்றிக் கவனிப்பார்களென்று நம்புகிறோம். பூர்வ ஜன்மம் உண்டென்பதும் புனர் ஜன்மம் உண்டென்பதும் வெவ்வேறு சித்தாந்தங்களல்ல பூர்வஜென்மம் உண்டென்பதை ஸ்தாபிப்போமாகில் புனர் ஜன்மம் உண்டென்பதே நம்பவேண்டும் புனர் ஜன்மம் உண்டென்று ஸ்தாபிப்போமாகில் பூர்வஜன்மம் உண்டென்று நம்பவேண்டும். ஏனென்றால் நமக்குப் பூர்வத்தில் ஒரு ஜன்மம் உண்டாயிருந்தது உண்மையானால் இப்பொழுது நாமடைந்திருக்கும் ஜன்மம் புனர் ஜன்மமாகும் அதுபோலவே நமக்கு இனிமேல் ஒரு ஜன்மமுண்டாகும்

பக்ஷத்தில் இந்த ஜன்மம் பூர்வ ஜன்மமாகின்றது ஆயினும் ஒவ்வொன்றுக்குமுள்ள ஆதாரங்களைப் பிரத்தியேகமாய்ச்சொல்லி ஸ்தாபிக்கக் கூடுமாயின் இரண்டினுடைய உண்மை பொய்மை நிச்சயித்தேகமாய் விளங்குமாதலால் முதன்மையாக பூர்வ ஜன்மத்தைப்பற்றி ஆதார ஆக்ஷேபங்களைப் பிரத்தியேகமாக விசாரிப்போம் ஆத்மா வேறு சரீரம் வேறு ஆத்மா நித்தியமானது சரீரம் அநித்தியமானது ஆத்மாவுக்கே அறிவுண்டேயன்றி சரீரத்திற்கு அறிவில்லை அறிவு உள்ள ஆத்மாவே நாமன்றி சரீரம் நாமல்ல என்னும் உண்மைகள் சர்வசமயத்திற்கும் சம்மதமாகி யுக்திக்கும் அனுபவத்திற்கும் ஏற்றனவா யிருப்பதால் இவைகளைப்பற்றி இங்கு வாதிப்பது அவசியமன்று மேலும் கியான சூன்னியாளாகிய நாஸ்திகவாதிகள் இந்த ஜன்மம் ஸ்வபாவமாயுண்டாகி ஸ்வபாவமாய் அழிந்துபோகும் பாவபுண்ணிய முதலிய பேதங்களெல்லாம் கட்டுப்பாடென்று சொல்லும் தூர்மதத்தை திரஸ்கரிக்கப் புகுவோமானால் இது அளவற்ற நூலாகப் பெருகுமாதலின் இங்கு கடவுள் உண்டென்பதையும் ஜீவாத்மா உண்டென்பதையும் நிராக்ஷேபமான உண்மைகளாகப் பாவித்துக் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட ஜீவாத்மாவுக்குப் பல ஜனனமரணாவஸ்தைகள் உண்டோ இல்லையோ வென்பதை மாத்திரம் விசாரிப்போம்,

தற்காலத்தில் பிரத்தியக்ஷமாகச் சம்பந்தப்பட்டிருக்கும் பிரகிருதிபாவமாகிய மானிட ஜன்மத்தை அடைவதற்கு முன்பு ஜீவாத்மா இருந்ததோ இல்லையோ வென்பதை யறிய அதின் சிருஷ்டிகாலமின்னதென்று நிச்சயிக்கவேண்டியதவசியம். சிருஷ்டி, ஸ்திதி, லயங்களுக்குக்கர்த்தாவாகிய ஆதிபகவான் தனது திருவுள்ளம் உன்னியமாத்திரத்தில் அண்டாண்டபிண்ட அசேதாசரமான உலகங்களும் அணு முதல் அற்புதாகாரமான எல்லாப்பொருள்களும் தேவர்கள் மக்கள் நாகர் முதலிய ஆத்மகோடிகளும் உண்டாயின வென்று வேதங்கள் முறையிடுகின்றன யுத்தியைக்கொண்டு ஆலோசிக்குமிடத்தும் ஆத்மாக்கள் ஆதியில் சிருஷ்டிகாலத்திலாவது அல்லது இப்பொழுது உயிர்கள் பிறக்கின்ற அந்தந்தக் காலத்திலாவது சிருஷ்டிக்கப்பட வேண்டும் பின் சொல்லியது உண்மையானால் சர்வவல்லமையுள்ள கடவுள் சர்வதா சிருஷ்டித்தொழிலில் பிரவேசித்திருக்கிறா ரென்றும் சிருஷ்டிக்கும் பொருட்டு அவருக்கு நிர்ணயமான ஒரு காலம் வேண்டுமென்றுங் கொள்ளவேண்டியதாயிருக்கும் இது சுருதி யுக்தி அனுபவங்களுக்கு விரோதமாயிருப்பதால் சிருஷ்டிகாலத்தில் தானே ஆத்மகோடிகள்

உண்டாக்கப்பட்டன வென்பதே உண்மை, அவ்வாறு உண்டாக்கப்பட்ட ஆத்மாக்கள் இதுவரையிலும் வாழ்ந்திருப்பது சத்தியமாதலா லும் இப்பொழுது நமதாத்மாவுக்கு வாசஸ்தானமாயிருக்கும் இந்தச் சரீரம் கொஞ்ச காலத்திற்கு முன்னதாகவே லபித்ததாயிருக்கிறபடி யாலும் இதற்குமுன் நாம் ஆத்மஸ்வரூபமாகவாவது மானிடாதி ஸ்தூலாகாரங்களாகவாவது இருந்திருக்கவேண்டும். ஆயினும் நமக்குப் பூர்வத்தில் அநேக ஜன்மம் உண்டாயிருந்த தென்பதற்கும் நாம் இதற்கு முன் பிரகிருதி சம்பந்தமான இந்த சரீரங்களைச் சேர்ந்திருந்தோ மென்பதற்கும் அனேக பிரத்தியக்ஷ பிரமாணங்களுண்டு இதனைக் கோற்றவன் குடி உமாபதி சிவாச்சாரியார் திருவாய் மலர்ந்தருளிய படிக்கும்

எண்ணரிதாய் நித்தமாயிருமண்மலத்தினழுந்தி
யிருவினையின் றன்மைகளுக்கீடான யாக்கை
யண்ணலருளா லண்ணியவை யவாயதனு
லலகினிகழ் போகங்களருந்து மாற்றாற்
புண்ணியபாவம் புரிந்து போக்கு வரவுடைத்தாயப்
புணருமிருண்மலபாகம் பொருந்தியக் காலருளா
லுண்ணிலவு மொளியதனுலிரு ளகற்றிப்பாத
முற்றிடுநற்பதவருக்கமே னவுரைப்பருணர்ந்தே.

ஸ்ரீமத் மாணிக்கவாசகப்பிரான் திருவாய் மலர்ந்தருளியப்படிக்கு.

புல்லாகிப்பூடாய்ப் புழுவாய்மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப்பாம்பாகிக்
கல்லாய்மனிதராய்ப் பேயாய்க்கணங்களாய்
வல்லசுரராகிமுனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅநின்ற வித்தாவரசங்கமத்தி
னெல்லாப்பிறப்பும் பிறந்திளைத்தேனெம்பெருமான்

திருவேகம்பமாலை.

அன்னை யெத்தனை யெத்தனை யன்னையோ
  வப்பனெத்தனை யெத்தனை யப்பனே
பின்னை யெத்தனை யெத்தனை பெண்டிரோ
  பிள்ளை யெத்தனை யெத்தனை பிள்ளையோ
முன்னை யெத்தனை யெத்தனை ஜென்மமோ
  மூடனாயடியேனு மறிந்திலே
னின்ன மெத்தனை யெத்தனை ஜென்மமோ
  வென்செய்வேன் கச்சி யேகம்பநாதனே.

என்செயலாவ தியாதொன் றுமில்லை யினித்தெய்வமே
யுன்செயலே யென்றுணரப் பெற்றேனிந்த வூனெடுத்த

பின்செய்த தீவினையாதொன்றுமில்லைப் பிறப்பதற்கு
முன்செய்த தீவினையோ விங்ஙனேவந்துமூண்டதுவே.

கைவல்லியநவநீதம்:—

சாதனமின்றி யொன்றைச்சாதிப்பாருலகிலில்லை
ஆதலாலிந்த நான்குமடைந்தவர்க்கறிவுண்டாகும்
நூதனவிவேகியுள்ளி னுழையாது நுழையுமாகிற்
பூதசன்மங்கள் கோடிபுனிதனும்புருடனுமே.

திருக்கருவைப்பதிற்றுப்பத்தந்தாதி:—

முன்னைப்பிறவித்தவப்பயனோ முழுதுமறியாமூடனிலை
என்னக்கருத்திலிரங்கியோ யாதோவறியேனிரவுபகல்
கன்னற்பாகிற் கோற்றேனிற் கனிந்தகவிபாட
லன்னத்தொகுதி வயற்கருவையாண்டா னென்னையாண்டதுவே.

வள்ளலார் சாஸ்திரம்:—

1. எண்பத்துநான்கிலக்கம் யோனிதோறும்புக்கதுவாயம்
புண்பொதியுமியாக்கைபுணரும்
2. புள்ளாயனேகவுருப்போனபினர்நல்லறுகம்
புள்ளாய்ப்பிறக்கவதுபோம்
3. பூமரங்களாய்ப்பிறந்து புண்ணியனுக்கானமையாற்
போமாத்தினூர் பிரவிபோல்
4. புண்ணியதீர்த்தக்கரட் புளுவாய்பிறந்தமையாற்
கண்ணும்புழுப்பிறப்புக் காண்
5. புள்ளாயனேகவுருப்போயபினர்ப்புட்பிறவி
விள்ளுந்திதோய விரைந்து
6. துட்டமிருகப்பிறப்பிற்றுலைந்துநெடுங்காலங்
கட்டப்படு முயரார்காண்
7. எல்லாவுருவுமெடுத்தெடுத்து நல்வினையா
னல்லாவுருவாகு நாடு,

மேல்காட்டிய பிரமாணத்தினால் ஜீவாத்மாக்கள் கன்மபந்தத்தில் கட்டுண்டு பூர்வ சன்னம் உணடென்று நன்கு விளங்கும்.

பின் தொடர்ந்துவரும்

கு. பு. பொன்னம்பல முதலியார்,
சென்னை புரசை சதுர்வேதாகம சித்தாந்த சபையின்
காரியதரிசி.

"புத்தகவரவு"

கோமதி கோகிலமானது என்னும் தமிழ் நாவலொன்று, இதனை இயற்றிய பண்டிதர் ஸ்ரீமத் கே. சா. சுப்பிரமணிய சர்மா அவர்களின் ஆசிரியரும் மதுரை நேட்டிவ் காலேஜ் பண்டிதரும் வித்தியாபாநு பத்திராதிபருமாகிய ஸ்ரீமத் கோபாலகிருஷ்ண ஐயர் அவர்களால் நம்மது பார்வைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இக்கதையானது மேல் நாட்டு நாவல்களைப்போன்று ஊக்கமுண்டாக்கத் தக்கவாறு ஆரம்பித்து, கதை இனிதாகவும் சந்தோஷகரமாகவும் முடிவு பெற்றிருக்கிறது. கதையானது மிக இனிமையாகவுஞ் செந்தமிழ்ச் சொற்களுடன் யாவரும் விரும்பத் தக்கவாறு எளிய நடையில் எழுதப்பெற்றும், இடையிடையே பொருள் வளமுள்ள ஆன்றோர் கவிகள் பல அழகு செய்து மிருக்கின்றது. இக்கதையின் கண் 'பெண் கல்வியின் அவசியம்' 'பால்ய விதவாவிவாகம்' 'கற்பின் திறம்' 'அன்பின் தன்மை' 'தீமை செய்தாற்கு நன்மை செய்தலே அறம்' 'கெடுவான் கேடுநினைப்பான்' என்னும் பல விஷயங்கள் நன்கு விரித்துக் கூறப்பட்டுள்ளது.

இப்புத்தகத்திற்கு, சேற்றூர் ஸமஸ்தான வித்துவானும் மதுரை 'வித்தியாபாநு'' பத்திராதிபருமாகிய ஸ்ரீமான் மு. ரா. கந்தசாமிக்கவிராயரவர்கள் ஓர் இனிய முகவுரை எழுதியிருக்கின்றனர். இப்புத்தகத்தின் விலை அணா பத்தே; இதனை வாசிப்போர் பல அரிய விஷயங்களை அறிவர் என்பது திண்ணம். புத்தகம் மதுரை விவேகபாநுப் பிரஸிலும் சென்னை, மயிலாப்பூர் ஜெனரல் ஸப்ளைஸ் கம்பெனியிலும் அகப்படும். 'S'

பலதேசவர்த்தமானம்.

தென்னிந்தியா ரேயில்வே:—இப்போது திருச்சிராப்பள்ளியிலிருக்கும், இந்த ரெயில்வேயின் ஏஜண்ட் ஆபீஸும், டிராபிக் மானேஜர் ஆபீசும் சென்னையில் ஸ்தாபிக்கப்படுமென்று சொல்லப்படுகிறது

***

ஓர் தத்துவசாஸ்திரியாரின் அபிப்பிராயம்:—அதிகப் பிரக்யாதி பெற்றுள்ள தத்துவசாஸ்திரி ஹக்ஸ்லி என்பவர், சொல்லுகிறார்:—கடவுள் இல்லையென்று எவன் நம்புகிறானோ அவன் மூடன், கடவுளைப்பற்றி எல்லாவற்றையும் பிறனுக்குச் சொல்லுகிறவன் மகா மகா மூடன்,

***

பிரிட்டிஷ் கடற்படை:—''குயின் மேரி'' என்றொரு சண்டைக் கப்பல், இப்போது புதிதாகக் கடலிலிறக்கப்பட்டுள்ளது. உலகத்திலுள்ள சண்டைக்கப்பல்களில் இது அதிக உக்கிரமானது,

***

லார்ட் கார்மிகேல்:—சென்னைக் கவர்னராயிருக்கும், லார்ட் கார்மிகேல், தாம் வந்து உத்தியோகம் பூண்ட காலம், அதிகமில்லாதிருந்தாலும், அதற்குள் ஒவ்வொரு பிரஜையின் மனதைக்காந்தம் இரும்பைக் கவர்வதுபோல் கவர்ந்துவிட்டார். கவர்னர் என்ற பதத்திற்குத் தமிழில், கவருந்தன்மையுடையவர் என்று பொருள்கொள்ளலாம். (மகிழ்வடையவருக்கு மகிழ்நர் என்பதுபோல்). ஆகவே இவரே உண்மையான கவர்னரென்பதற்கு அவர் செய்துவந்த பற்பல காரியங்களே

சாக்ஷி பகரும். தயாளமும், பிரஜைகளிடத்து அத்யந்த பிரீதியுமுடைய இவர் 25-3-12ல் சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் நடந்த செங்கற்பட்டு ஜில்லா ஐக்கிய நாணயச்சங்கத்தின் நான்காவது கூட்டத்தில் சபாநாயகராய் அமர்ந்து, எல்லோராலும் உபசரிக்கப்பட்டனர் தம் முடிவுரையில், சபையாரைப் பார்த்துத் தமிழில் நன்குபேச அசக்தராயிருப்பதினால், 'சரியானாலும் பிசகானாலும் அங்கீகரிக்க வேண்டும்' என்று சொல்லிப் 'போய்வாரேன் சுகமாயிரு' என்ற மங்கள வாக்கைத் தமிழிலேயே சொல்லி முடித்தனர். என்ன அருமை! என்ன அன்பு! இச்சுகுணாகரக் குன்றத்தை, 23-3-12 முதல் நாம் பிரியப்போகிறோமே!

நவீன சப்பாத்து:—நீர்மேல் நடப்பதற்கு ஜெர்மெனியரொருவர், ஓர் நூதன சப்பாத்து கண்டு பிடித்திருக்கிறார்.

சீனாவின் ஜனத்தொகை:—இந்தியாவில் இவ்வருஷமிருக்கும் ஜனத்தொகைக்கு மூன்று லக்ஷங்குறைந்ததே சீனாவின் ஜனத்தொகையென்று ஓர் அமெரிக்கப் பத்திரிகை கூறுகிறது.

விநோத விருந்து!—டாடன்ஹாம் கோர்ட்டிலுள்ள ஒரு விடுதியில், ஒரு சபையார் விருந்து நடக்குமிடங்களைத் தோட்டம், வாயம், முதலியவைகளைப் போலச் சிங்காரித்து வைத்துக்கொண்டு தாங்களும் பறவை, நாய் புலி, சிங்கம் முதலியவைகளைப்போல் வேஷம் போட்டுக் கொண்டு, உண்டார்களாம். பரிமாறுபவர் பூனைவேஷம் போட்டுக் கொண்டிருந்தார்களாம். (ஒருபத்திராதிபர் கூறுகின்றார்.)

ஓர் பெண்மணிப்போரால் ஆஸ்பத்திரி;—தென்னாற்காடு ஜில்லா வளவனூரில், புதுச்சேரியிலிருந்த சி. கிருஷ்ணசாமி செட்டியாரின் மனைவியார், அபாஞ்சியம்மாள் 5 ஆயிர ரூபாய் உதவியிருக்கின்றார்களாம். இவரன்றோ சற்குணி.

உயிர்குடிக்குற்ற குணம்;—தஞ்சாவூர் ஜில்லாக் கலெக்டராயிருக்கும் மிஸ்டர் ராய் அவர்களின் மனைவியார் சந்தைக்குத்தாமே போய் காய்கறிகள் வாங்கிச்சென்றார்களாம். நவரத்தினத்திற்குரிய மதிப்பு என்றும் குறையாதன்றோ, இவர்கள் பங்காள தேசத்தவர் கூழாங்கற்கள்தான் பெருமையாற் கூத்தாடும்.

ஜப்பான் கப்பல்கள்:—இந்தியாவுக்கு ஜப்பானிலிருந்து கப்பல்கள் வந்து, பிரிடிஷ் இந்திய ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனியாருக்குப் போட்டியாக ஏற்றுமதி செய்வதில், முற்பட்டிருக்கின்றன. பழைய கம்பெனியாருக்கு அச்சமுண்டாயிருக்கின்றது:

இந்திய ஸாகர்த்தர்;—அமெரிக்கா ஐக்கிய மாகாணத்தில் சத்தியேந்திரநாத் சட்டர்ஜி என்னுமொரு இந்தியர், லெப்டினென்ட் உத்தியோகம் பெற்றுச் சேனையிலிருக்கிறார் இந்தியாவுக்கு இது எவ்வளவு கௌரவம் பார்த்தீர்களா?

வீரிய விருத்திக்கும் இழந்த பலத்தையும் நரம்புபடுத்துவத்தையும்

திரும்ப அடைவதற்கும உபயுக்தமான

இரண்டு உயர்ந்த ஔஷதங்கள்.

மதன மஞ்சரி மாத்திரைகள்.

" நோயுள்ளவர்களுக்கும், நோயற்றவர்களுக்கும், ஆடவர்களுக்கும், ஸ்திரீகளுக்கும் உபயோகமானவை."

1. இவை, ஜீரண சம்மந்தமான கோளாறுகளைப் பரிகரித்து நல்ல பசியை உண்டாக்குவன.

2. இரத்தத்தை சுத்திகரித்து விருத்தி செய்து தேகத்திற்கு நல்ல திடத்தையும் மேனியையுங்கொடுப்பவை.

3. உடம்பில் ஏற்பட்ட எவ்விதநரம்புத்தளர்ச்சியையும் நிவர்த்தித்து நரம்பு ஸ்தானங்களுக்குப் படுத்துவத்தை அளிக்கத்தக்கவை.

4. கை, கால், கண், எரிச்சலைப் போக்கடித்து மூளையைக் குளிரச்செய்து ஞாபக சக்தியை விசேஷித்துத் தருபவை.

5. ஸ்திரீகளுக்குண்டாகும் கற்பப்பை சம்பந்தமான சகலவித துன்பங்களையும் நிவர்த்திப்பவை.

etc. etc.

40-மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூபா 1.

நபும்ஸகத்வாரி கிருத்.

இக்காலத்தில் சாதாரணமாக வாலிபர்களுக்கு சகவாஸ தோஷத்தால் ஏற்படும் துராப்பியாசங்களால் உண்டாகும் ஜனனேந்திரிய நரம்புத்தளர்ச்சிக்கும் ஆண்தன்மைக்குறைவிற்கும் கைகண்ட ஔஷதம்.

2-தோலா கொண்ட டப்பியின் விலை ரூ 1.

எங்கள் ஔஷதங்களையும், அவற்றின் ஆச்சரிய முண்டுபண்ணத்தக்க குணங்களையும் குறித்து, அவ்வௌஷதங்களை உபயோகித்து சௌக்கியம் பெற்றவர்களில் மகாராஜாக்கள், ராஜாக்கள், ராஜகுமாரர்கள், மந்திரிகள், ஜமீந்தார்கள், அமீர்கள் முதலானோர்கள். ஆயிரக்கணக்கானநற்சாக்ஷிப்பத்திரங்கள் நாங்கள் தேடாமலும், கேளாமலும் அனுப்பியிருக்கிறார்கள்.

மேலே சொல்லிய மருந்துகளைப் பற்றியும் எங்கள் **வைத்திய வித்தியா** புஸ்தகத்தை வாசியுங்கள். அது **சுகத்துக்கும் ஐசுவரியத்துக்கும் க்ஷேமத்துக்கும்** பெரிய வழிகாட்டியாகும்.

இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு, குஜராத்தி, முதலிய எந்தப் பாஷையில்வேண்டுமானாலும் இந்தப் புஸ்தகத்தை **இனாமாக** தபால் செலவுகூட இல்லாமல் அனுப்புவோம்.

லக்ஷக்கணக்கான புஸ்தகங்கள் இதுவரை செலவாயிருக்கின்றன,

ராஜவைத்திய நாராயண்ஜீ கேசவஜீ.

புரொப்ரைட்டர் ஆயுர்வேதிய ஔஷதசாலா,

No. 177, சைனாபஜார் ரோட் ஜம்பேதார் கட்டிடத்தில் சென்னை.

செந்தமிழ்ச் செல்வத்தின்

உள்ளூர்ச்சந்தாதாரர்களே! வெளியூர்ச்சந்தாதாரர்களே!

தயவுசெய்து சென்ற வருஷச் சந்தாவை யனுப்புங்கள், வருஷம் ஒன்று கடந்தும் அனுப்பாதிருக்கலாமா? சென்ற வருஷச் சந்தாவை யெதிர் பார்க்கின்றேம்.

இனி, இப்பொழுது பிறந்திருக்கும் இரண்டாவது வருஷச் சந்தாவையும் உடன் கூட்டியனுப்பின் நலமே. அனுப்பாதிருப்பின் வி. பி. தபாலில் வரும், தயவுசெய்து திருப்பிவிடாது ஏற்று இந்நன் முயற்சிக்குத் துணைசெய்வீர்களென்று நம்புகின்றேம்.

சென்ற வருஷச் சந்தாவை அனுப்பாதிருப்பின் சென்ற வருஷச் சந்தாவிற்கும் பிறந்திருக்கும் வருஷத்திற்கும் சேர்த்து வி. பி. தபாலில் அனுப்பப்படுமென்பதையும் அறிய வேண்டுகின்றேம்.

பத்திராதிபர்.

EMPIRE OF INDIA LIFE ASSURANCE Coy. (LTD.)

BOMBAY.

Advantages: Purely Indian; Absolute Government Security: Premiums lower than English or Foreign Companies; High Surrender Values; Loans 6%; Quick settlement of claims &c

Please Apply to:—

J G GNANADURAI,

S/o Mr. J. GNANAMUTHU B. A.

Puthoor, Trichinopoly.

The Editor of the S. P. G. High School Magazine will be glad to send a copy of April Number to any Old Student of the School on receipt of 2½ anna stamps

Subscription for next term June to December) is **9** ans. including Postage.